# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 56
விலை ரூபாய் 30.00


தீபம்-56 | பங்குனி இதழ் - 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013


திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் (யோவேல் 2:12)**

## புனித மரியாள் பேராலயத்தின் கிளைப்பங்கான செபஸ்தியார் ஆலயம்







புனித மரியாள் பேராலயத்தின் கிளைப்பங்காகிய புனித செபஸ்தியார் ஆலயம் மக்களின் ஆன்மீக தேவை கருதி குறுகிய காலத்திற்குள் பெரிதாக்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு, புதுப்பொலிவுடன் தோன்றியிருப்பது பங்கு மக்களுக்கு பெரிதும் ஆச்சரியத்தையும் பெருமகிழ்ச்சியையும் தந்துள்ளது. கடந்த மாதம் 27ம் திகதி திருவிழா திருப்பலியின் போது மறைமாவட்ட ஆயரினால் ஆசிர்வதிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. 2.2 மில்லியன் ரூபாய் இதற்காக செலவிடப்பட்டுள்ளது. இவ் ஆலயம் முற்று முழுதாக இக் கிராமத்து மக்களின் பண, சரீர உதவியினாலேயே கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எல்லாம் வல்ல இறைவனுக்கும், தம்மை முழுவதும் அர்ப்பணித்து எம்மை வழிநடத்தும் பங்குத்தந்தை அருட்பணி. போல் ரொபின்சன் அடிகளாருக்கும் எமது நன்றிகள்.

**தகவல் : புனித மரியாள் பேராலயம்**

## சான் கிறிஸ்பினோ பங்கு தளத்தின் திருப்பலி மேடையில்.........



உரோம் நகரின் அயர் என்ற முறையில் கடந்த ஞாயிறன்று உரோம் புறநகர்ப் பகுதியிலுள்ள விதெர்போவின் சான் கிறிஸ்பினோ என்ற பங்கு தளத்திற்கு திருப்பலி நிறைவேற்றச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தொடங்கும் தவக்காலத்தை, நாம் மற்றவர்களை எவ்விதம் நடத்துகிறோம் என்பது குறித்து ஆழ்ந்து சிந்திக்கும் காலமாகப் பயன்படுத்த வேண்டும் என தன் மறையுரையில் விண்ணப்பித்தார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

## இயேசுவோடு 24 மணி நேரம்

## விசேட நற்கருணை ஆராதனை



காலம் :

**2019 மார்ச் மாதம்**


**22ம் 23ம் திகதிகளில்**

(வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை)

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக

**செபத்தில் இணைந்து கொள்வோம்**

## திருக்குடும்ப சபையின் யாழ் மாகாண ஆலோசனைக் குழுவின் புதிய அங்கத்தவர்கள்



| | |
|---|---|
| தியோவ்வின் குரூஸ் | மாகாணத் தலைவி |
| மரிஸ்ரெலா சூசைப்பிள்ளை | மாகாணப் பொருளாளர் |
| ஜோசப்பின்மேரி இராஜரட்னம் | மாகாண ஆலோசகர் |
| அன்ரனிற்றா மாற்கு | மாகாண ஆலோசகர் |
| திருச்செல்வராணி அலஸ் | மாகாண ஆலோசகர் |
| புறோத்மேரி மரியானந்தம் | மாகாண ஆலோசகர் |

23.02.2019 அன்று தலைமைத்துவப் பணியைப் பொறுப்பேற்றார்கள். இவர்களது பணிவாழ்வுப் பயணத்திலே இறைவனின் அன்பும் பராமரிப்பும் வழிநடத்தலும் நிறைவாகக் கிடைக்க ஆசித்து வாழ்த்தி நிற்கின்றோம்.

**அருட்சகோதரி கிறிஸ்ரா & ஆலோசனைக் குழுவினர்**

**இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பு நாள் (2கொரி 6: 2)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமா தயக்கம்!

(சுயவிழிப்புணர்வு தொடர் - 1)

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரால் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம். **திருமலை தீபம்** இதழ் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

மனிதன் மகிழ்ச்சியாக வாழ என்ன செய்ய வேண்டும் என்று நம் ஆண்டவர் இயேசு தன் வாழ்வு மூலம் நமக்கு வெளிப்படுத்தினார். இதனை அவருடன் வாழ்ந்த சீடர்கள் நமக்கு நற்செய்தியாக தந்துள்ளார்கள். இதனை நம் வாழ்வாக்க பல முறைகளில் முயற்சித்து வருகிறோம். ஆனால், இவ்வுலக **மாயை,** நம்மை ஆசையாகவும் நம் உள்ளத்தில் உள்ள **'நான்'** என்னும் **ஆணவமாகவும்,** நம் அயலார் மீதுள்ள **பகைமையாகவும்** வந்து நம் வாழ்வின் இலட்சியத்தை சிதைத்து விடுகின்றன. இவையே நம் உள்ளத்தில் உள்ள **பொறாமை, கோபம், வெறுப்பு, பயம், கவலை,** போன்ற **எதிர்மறை உணர்வுகளுக்குக்** காரணம். இவையே நாம் அன்பின் முழுமையையும் மகிழ்ச்சியையும் பெற்றுக் கொள்வதற்குத் தடையாக இருக்கின்றன. இவற்றைத் **'தயக்கங்கள்'** என்று கூறுகின்றோம். இது போன்ற தயக்கங்களை மனிதர்கள் உணர்ந்து தீமைகளைத் தவிர்த்து நன்மைகளை வாழ்வதே இறையாட்சியாகும். இதை அனைவருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே எமது ஆசையாகவும் உள்ளது. எனவே **இன்னுமா தயக்கம்?** இறைவனின் இறையாட்சிப் பயணத்தைத் தொடர வாரீர், புறப்படுவோம்!

மனிதன் தன் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆண்டவர் இயேசு, **"நாம் அனைவரும் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும்"** என்று கூறுகின்றார். இதையே நமக்கு முதன்மையான கட்டளையாகவும் கொடுக்கின்றார். ஆனால், இந்த **"அன்பு"** என்ற விழிமியம் பல நேரங்களில் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதால் அன்பு செய்யப்படுவது பல வேளைகளில் சாத்தியமில்லாததாக நம் வாழ்வில் மாறிவிட்டது. இது போன்ற பல விழிமியங்களை நம் வாழ்வில் இந்த உலகின் **மாயை** சாத்தியமில்லாததாகக் காட்டிக் கொண்டிருக்கின்றது. இவற்றை நாம் உணர்ந்து கொண்டு நம் வாழ்வில் மாயை எவ்வாறெல்லாம் நம்மை **அடிமைப்படுத்தி** வைத்திருக்கின்றது என்பதை கண்டுகொள்வோம், அதன் மூலம் விழிமியங்களை அவற்றின் தேவைகளை அறிந்து நம் வாழ்வில் கடைபிடிக்க முயல்வோம். அந்த முயற்சியில் இந்த தொடர் கட்டுரை உங்களுக்கு உதவியாக இருக்கும் என நம்புகிறோம்.

இத்தொடரின் முதல் கட்டுரையாக **'உண்மையை நாம் எப்படி உணர்ந்து கொள்வது!'** என்பதைப் பற்றி சிந்திப்போம்.

அன்பார்ந்தவர்களே! உண்மை என்றால் என்ன? நம் ஆண்டவர், **"உண்மைக்கு சான்று பகர்வதே எனது பணி"** என்று கூறினார். அவர் தன் வாழ்வில் உண்மையைக் கடைபிடித்ததன் வாயிலாக நமக்கும் உண்மையின் பக்கங்களை திறந்து காட்டியிருக்கின்றார். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவருமே இந்த **உண்மையின் சாட்சிகளாக** இருக்கின்றோம். இந்த உண்மையை நம் வாழ்வில் கடைபிடித்து அதனை பிறருக்கும் அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். எனவே உண்மை என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வோம்!

உண்மை என்பது ஒருவருக்கு கிடைக்கின்ற **நிறை ஞானமாகும்.** உண்மையை அறிந்தவன், இந்த உலகில் அனைத்து அடிமை நிலைகளினின்றும் விடுதலை அடைந்தவனாக இருக்கின்றான். எனவே ஒவ்வொருவரும் இந்த உண்மையை அறிந்து கொள்வது மிக தேவையானதாக இருக்கின்றது. இதை எப்படி அறிந்து கொள்வது?

மாமேதை ஒருவர் உங்கள் வீட்டுக்கு வந்துள்ளார் என வைத்துக் கொள்வோம். அந்த செய்தியை தெரிவிக்க உங்கள் சகோதரர் உங்களைத் தேடி வருகின்றார். உங்கள் வீட்டில் உள்ள அந்த மாமனிதனைப் பற்றி உங்களிடம் கூறுகின்றார். உங்களை அவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருக்கின்றது. அப்போது நீங்கள் அவரிடம், "அந்த மாமனிதர் எப்படி இருப்பார்?" என கேட்கிறீர்கள். உங்கள் சகோதரர், உங்களிடம் அவரது தோற்றத்தைப் பற்றி வர்ணிக்கின்றார். "அவர் மிக உயரமான தோற்றத்தை உடையவர், ஒளி வீசும் கண்கள், வசீகரிக்கும் முகம்..." என்று அவரது தோற்றத்தைப் பற்றி உங்களிடம் கூறுகின்றார். உடனடியாக அவரைப் பற்றிய ஒரு தோற்றம் உங்கள் மனதில் தோன்றியிருக்கும். மனதில் தோன்றிய கற்பனைத் தோற்றத்தை மனதில் பதித்துக் கொண்டு நீங்கள் உங்கள் வீட்டுக்கு வருகிறீர்கள். இப்போது அந்த மாமனிதரை நேரில் காண்கிறீர்கள். அப்படிக் காணும் போது, நீங்கள் உங்கள் மனதில் கற்பனை செய்து வைத்திருந்த உருவமும் நேரில் காணும் உருவமும் ஒன்றாக இருக்கும் என நினைக்கிறீர்களா? நிச்சயமாக இருக்காது. அப்படியானால், உங்கள் சகோதரர் உங்களிடம் பொய் சொல்லியிருக்கிறாரா? நிச்சயமாக இல்லை. அவர் உள்ளதைத் தான் பேசினார். ஆனால், அந்த செய்தி, நான் உண்மையை அறிந்துகொள்ளப் போதுமானதாக இல்லை. எனவே 'வெறும் வார்த்தைகளால் உருவான செய்தியைக் கேட்டு நான் உண்மையைப் பெற்றுக் கொண்டேன்' என்று சொல்வது, **பொய்யை விட மோசமான ஒன்றை** நம்புவதற்குச் சமம். ஏனெனில், அது நிச்சயமாக உண்மையில்லை.

இதிலிருந்து நாம் ஒரு முக்கியமான செய்தியை புரிந்து கொள்ள வேண்டும்: **உண்மையை நாம் இன்னொருவரிடமிருந்து பெற்றுக் கொள்ள இயலாது.** அப்படி அடுத்தவரிடமிருந்து பெற்றுக் கொள்வது உண்மையாக இருக்காது. அப்படியானால் உண்மையை எப்படி அறிந்துகொள்வது? அந்த மாமனிதரை நானே சென்று பார்த்தாலொழிய எனக்கு உண்மை தெரியப்போவதில்லை. எனவே **நானே அனுபவித்து அறிந்து கொள்வது தான் உண்மை.** இந்த அனுபவத்தைப் பிறரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது.

ஒரு பண்டிதர் ஒரு ஊருக்கு பயணம் சென்றார். அந்த ஊருக்கு படகில் தான் செல்ல வேண்டும் என்பதால் அங்கிருந்த ஒரு படகோட்டியை அணுகிறார். மிகப் பெரிய பண்டிதர் தன் படகில் பயணம் செய்யப் போகிறார் என்பது அந்தப் படகோட்டியை மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. மிகுந்த உற்சாகத்துடன் தன் படகில் அவரை ஏற்றிக் கொண்டு அக்கரையை நோக்கி பயணம் செய்தான் அந்தப் படகோட்டி. செல்லும் வழியில் பண்டிதர் நீச்சலைப் பற்றி அந்த படகோட்டியிடம் உரையாடிக் கொண்டு வந்தார். 'நீச்சல் அடிக்கும் போது நாம் கைகால்களை முன்னும் பின்னும் அசைத்து நம்மைச் சுற்றியுள்ள தண்ணீரை பின்னோக்கி தள்ளினால் நாம் முன்னோக்கி தள்ளப்படுகிறோம்', என்பது போன்ற நீச்சல் பற்றிய அறிவியல் விளக்கத்தை அவனுக்குச் சொல்லிக் கொண்டு வந்தார். இவற்றைக் கேட்ட போது படகோட்டிக்கு மிகுந்த மகிழ்ச்சி. 'இவர் தண்ணீரில் எப்படிப்பட்ட ஆபத்து வந்தாலும் நம்மைக் காப்பாற்றி விடுவார்' என்று நினைத்துக் கொண்டு, "பண்டிதரே, இன்னும் சற்று நேரத்தில் இந்த ஆற்றில் வெள்ளம் வரப்போகிறது என்பது உமக்குத் தெரியுமா? தண்ணீர் மட்டம் வேகமாக உயர்ந்து கொண்டு வருவதை கவனித்தீரா? இது போன்ற வெள்ளத்தில் தான் எங்கள் ஊர் மக்கள் பலர் இறந்திருக்கிறார்கள். நீங்கள் நீச்சலையே இந்த அளவிற்கு கற்றிருப்பவர் என்பதால், இந்த வெள்ளத்திலிருந்து தப்பிக்க என்ன செய்யலாம் எனக் கூறுங்கள்" என்று கூறினான். அதற்கு பண்டிதர், "வெள்ளமா, அதிலிருந்து நான் தப்பிக்கப் போகிறேனா, ஐயா, எனக்கு நீச்சலைப் பற்றிய அறிவியல் விளக்கம் தான் தெரியுமே தவிர எனக்கு நீச்சல் அடிக்கத் தெரியாது. நீ தான் என்னை இந்த வெள்ளத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்!" என்று கூறினாராம்.

உண்மைகள் அறிவுப்பூர்வமானவையாக இருந்தாலும் அவை அனுபவப்பூர்வமானவை. **'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'** எனறு கூறுவார்கள். ஏட்டு அறிவு மட்டும் உண்மையாகிவிடாது. **ஏட்டில் கற்றவற்றை அனுபவத்தில் அறிந்துகொண்டால்** தான் அது முழுமையான அறிவாக இருக்கும். இது இறைவனைப் பற்றிய உண்மையை அறிந்துகொள்வதற்கும் பொருந்தும். இறைவனை நாம் நம் உள்ளத்தில் அனுபவித்து அறிந்து கொள்ள வேண்டும். மறையுரைகளிலிருந்து, புத்தகங்களிலிருந்து நாம் பெற்றுக் கொள்வது முழுமையான இறைஉண்மையாக இருக்காது. திருச்சபையில் இறைவனைப் பற்றிய உண்மைகளை **மறையுண்மைகள்** என்று கூறுகின்றார்கள். இதன் பொருள், அனைத்தும் சொல்லப்பட்ட வார்த்தைகளில் நிறைந்துவிடவில்லை, மாறாக இதில் பல உண்மைகள் மறைந்திருக்கின்றன. அந்த உண்மைகளை நாம் அனுபவத்தின் மூலமாக மட்டுமே அறிந்து கொள்ள முடியும்.

எனவே வள்ளுவரின், **"எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு"** என்ற குறளின் படி, வார்த்தைகளால் கேட்பவை அல்ல, கேட்கும் வார்த்தைகளை நம் சொந்த அனுபவத்தில் அறிந்து கொள்தலே அறிவு என்பதைப் புரிந்து கொண்டு முழுமையான அறிவை பெற்றுக்கொள்ள முயல்வோம். இந்த முழுமையான அறிவே உண்மைக்கு இட்டுச் செல்லும் வழியாகும். இதனைப் பற்றிய மேலதிக விளக்கத்தை அடுத்த இதழில் காண்போம் எனறு கூறி உங்களனைவரிடமிருந்தும் விடை பெறுகின்றேன்.

நன்றி.

**அருட்பணி. அலெக்ஸ் க.ச.,**

# போதைப் பொருட்களின் பாவனையால் அடிமையாகும் எம் இளைய சமுதாயம்

போதைப் பொருட்களை பாவிக்கும் பிள்ளைகளின் வாழ்வில் பாரிய அளவிலான அழிவையும் இழப்பினையும், விளைவினையும் போதைப் பொருள் அடிமைத்தனமாக காணப்படுகின்றது. இன்னும் தெளிவாகக் கூறினால் அவர்களின் எதிர்கால வாழ்வும் கனவுகளும் சின்னாபின்னமாகிவிடும். போதைப் பொருட்களை பாவிப்பவர்களுக்கும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இளைய சமுதாயத்தினர் போதைப் பொருட்களை விளையாட்டாகவும் பொழுது போக்கிற்காகவும் ஆராய்ச்சிக்காகவும் பயன்படுத்துகின்ற போது விளையாட்டு வினையாகி போதைப் பொருட்களுக்கு அடிமைகளாகி விடுகின்றார்கள்.

இளைய சமூகத்தினர் போதைப் பொருட்களை பயன்படுத்தும் போது அவர்களின் அறிவாற்றல் பழக்கவழக்க நடத்தையிலும் நீண்ட கால தீமையான விளைவுகளை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. ஆனால் எம்முடைய இளமைப் பருவத்தில் உடலிலும், உள்ளத்திலும் ஏற்படுகின்ற மாற்றங்களை நன்மைத்தனங்களுக்கு மாற்றம் செய்வோமாயின் மனிதமும் மனித நேயமும் எம் சமுதாயத்தில் சிறப்பாக வளர்ச்சி பெற்று எமது இளைய தலைமுறை வாழ்வு பெறும்.

போதைப் பொருட்களின் பாவனையினை தவிர்க்க அல்லது தடுக்க முதலில் போதைப் பொருட்களின் பாவனையினை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் அதன் பிறகு அதனை தடுக்க முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறாயின் தலை விரித்து ஆடும் போதைப் பொருட்களின் பாவனையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். எம்முடைய இளைய சமுகத்தினரை போதைப் பொருட்களின் பாவனையிலிருந்து மீட்க உதாரணமான வாழ்க்கை, நல்ல எண்ணங்கள், போதைப் பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு செயல் அமர்வுகள், கருத்தரங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

புதிய வகையான போதைப் பொருட்களை பாவனை செய்பவர்களின் வயது எல்லை 18 ஆக இருப்பதாக ஆய்வுகளின் ஊடாக அறிய முடிகின்றது. இளைய சமுகத்தினரின் வாழ்வில் போதைப் பொருட்களின் பாவனை தொடர்பான தேடல், விருப்பம், ஆர்வம், ஆராய்ச்சி அவர்களின் வாழ்வில் பெரிதும் பாதிப்பை உண்டு பண்ணுகின்றது. போதைப் பொருட்கள் தொடர்பான அளவுக்கு அதிகமான ஆசையும் ஆர்வமும் எம் இளைய சமுகத்தை போதைப் பொருள் பாவனைக்கும் அடிமைத்தனத்திற்கு இட்டுச் செல்லும்.

இளைய சமுகத்தினர் போதைப் பொருள் பாவனைக்கு உட்படுவதற்கான காரணங்களாக போதைப் பொருட்களின் மேல் ஆர்வமும் ஆசையும் தோழர்களின் அழுத்தம் மன அழுத்தம் உணர்வு ரீதியான போராட்டம், குடும்பப் பிண்ணணி, வறுமை, நுகர்வு கலாச்சாரம், குற்றச் செயல்களில் நாட்டம், வெறுப்புணர்வு போன்றவற்றை குறிப்பிடலாம்.

எம் இளைய தலைமுறையினர்கள் போதைப் பொருட் பாவனையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை பின்வரும் அறிகுறிகளினூடாக கண்டு கொள்ளலாம்.

அவையாவன: வெற்றிலை போடும் பழக்கம், மது அருந்தும் பழக்கம், தீமையான நடத்தை, கண்களில் இரத்தம் படிந்தல் (சிவப்பு நிறமான கண்கள்), கராணமின்றி சிரித்தல், குறைவான சுகாதார பழக்கம், சிதைந்து போகும் மனித உருவம், கண் பார்வை குறைதல், அடிக்கடி பசி ஏற்படுதல், தூய்மையற்ற மணம் (உடைகளில் சுவாசிக்கும் போது), இரகசியமான நடத்தை. வழமைக்கு மாறான களைப்பு. இவ்வாறான அறிகுறிகளை பெற்றோர்கள் தம் பிள்ளைகளிடம் அவதானிக்கும் வேளையில் பிள்ளைகளுடன் நட்பு ரீதியான உரையாடல்களை மேற்கொள்வதோடும் பிள்ளைகளிடம் நேர்த்தியான கேள்விகளை கேட்கின்ற போது (உங்களுக்கு போதைப் பொருள் அல்லது மது பாவனையில் நாட்டம் உள்ளதா? அல்லது யாராவது அண்மையில் உமக்கு போதைப் பொருட்களை கொடுத்தார்களா?) அவர்களை இத்தீங்குகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எம் இளைய சமூகத்தை போதைப் பொருட்களின் பாவனையிலிருந்து பாதுகாத்து புதிய உலகினைப் படைப்போம்.

**தமிழாக்கம்: அருட்பணி யேசுதாஸ் சுதர்சன்**
**கிறிஸ்து அரசர் ஆலயம்**
**(கன்னியா - திருகோணமலை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் பகிர்வு



அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்




ஒவ்வொன்றுக்கும் ஒரு காலம் உண்டு என்கின்றார் சபை உரையாளர். (சஉ 3:18). இப்பின்னனியில் மனமாற்றத்திற்கான சிறந்த காலமாக தபசு காலம் விளங்குகிறது. இந்தக் தபசு காலம் உயிர்ப்புப் பெருவிழாத் தயாரிப்புக் காலம் என்று அழைப்பதும்கூட மிகவும் பொருத்தமானது. காரணம் இக்காலத்தின் நோக்கம் தபசு அல்ல? மாறாக உயிர்ப்பின் மகிழ்வைக் கொண்டாட நம்மையே நாம் தயாரிப்பது ஆகும். இதற்காக நாற்பது நாட்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன.

**விவிலியத்தில் நாற்பது என்ற எண்ணைப் பல இடங்களில் பார்க்கின்றோம்:**

- நோவா காலத்துப் பெரு வெள்ளம் 40 நாள்கள்.
- இஸ்ரயேல் மக்களின் பாலைநிலப் பயணம் 40 ஆண்டுகள்.
- எலியா இறைவாக்கினரின் உண்ணா நோன்பு 40 பகலும் 40 இரவும்.
- மோசே சீனாய் மலையில் உண்ணா நோன்பு 40 நாள்கள்.
- நினிவே மக்களின் தவம் 40 நாள்கள்.
- இயேசுவின் பாலைநில அனுபவம் 40 நாள்கள்.

இங்கு நாற்பது நாட்கள் அல்லது நாற்பது ஆண்டுகள் என்பது மணிக்கணக்கையோ அல்லது நேரக்கணக்கையோ குறிப்பது அல்ல. மாறாக, இறைவன் வழங்கிய அருளின் காலத்தைச் சுட்டிக் காண்பிக்கிறது.

இறையியலாளர்கள் காலத்தை இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றனர். ஒன்று வரலாற்றுக் காலம் (chronos) மற்றொன்று அருளின் காலம் (Kairos). திருநீற்றுப் புதனில் ஆரம்பமாகும் இந்த நாற்பது நாட்களை வரலாற்றுக் காலமாக அல்ல? மாறாக அருளின் காலமாக அணுக திருஅவை அழைப்பு விடுக்கிறது. அதாவது இத் தவக்காலத்தை இறைவனின் கொடைகளையும் வரங்களையும் சிறப்பான முறையில் தாங்கி வரும் காலமாக அணுக அழைக்கப்படுகின்றோம்.


இத்தவக்காலத்தில் உபவாசம் இருக்க விருப்பமா? இதோ நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய பரிந்துரைகள்:

- பிறரை நோகடிக்கும் வார்த்தைகளை உபவாசித்து, அன்பான வார்த்தைகளைப் பேசு.
- சோகமான நிலையை உபவாசித்து, நன்றியுள்ளத்துடன் மகிழ்ச்சியோடு இருக்கப் பழகு.
- கோபத்தை உபவாசித்து, பொறுமையைக் கற்றுக்கொள்.
- அவநம்பிக்கை கொள்வதை உபவாசித்து, நம்பிக்கையில் நிலைத்திரு.
- வீண் கவலைகளை உபவாசித்து, இயேசுவில் நம்பிக்கை வை.
- குறை கூறுவதை உபவாசித்து, இருப்பதைக்கொண்டு எளிமையாக வாழப் பழகு.
- மன அழுத்தங்களை உபவாசித்து, செபத்தில் நிலைத்திரு.
- மனக் கசப்புக்களை உபவாசித்து, உள்ளத்தை சந்தோசத்தினால் நிரப்பு.
- சுயநலத்தை உபவாசித்து, பிறர் நலனில் அக்கறையாயிரு.
- காழ்ப்புணர்வுகளை (வெறுப்புக்களை) உபவாசித்து, சமாதானம் செய்துகொள்.
- அதிகமான வீண்பேச்சை உபவாசித்து, அமைதியாயிரு... இதனால் நல்லவற்றைக் கேட்டுத் தியானிக்க முடியும்.

இவ்வாறு இந்த பொன்னான நாற்பது நாட்களும் கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவிற்காக நம்மைத் தயாரிக்கக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம் என்பதை நன்றியோடு ஏற்றுக்கொள்வோம். நம் வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து நல்லவைகளை நாடிச் செல்லவும் அல்லவைகளை அகத்திருந்து அகற்றவும் அன்போடு அழைக்கும் இத்தவக்காலத்தைப் பற்றிக்கொள்வோம். செபத்தாலும், தவமுயற்சிகளாலும், அருள்வாழ்வாலும் நம்மை அலங்கரித்து, இறைவனோடும் பிறரோடும் ஒப்புரவாகி இனிதே வாழ்வோம். இயேசுவின் சீடராய் மிளிர்வோம்!

# படித்ததில் பிடித்தது

## ஈடுபாடு



**சுவாமி மித்ரானந்தா சொன்ன கதை இது.....**

கான்ட்ராக்டரிடம் வருடக்கணக்கில் மேஸ்திரி வேலை செய்து வந்தான் ஒருவன்.
ஒருநாள் முதலாளியிடம் வந்து நின்றான்:
'ஐயா, என் உடல் தளர்ந்து விட்டது. வேலையிலிருந்து நின்றுவிடப் போகிறேன்.'
மறுத்தார் முதலாளி:
'அதெல்லாம் முடியாது. திடீரென்று சொன்னால் எப்படி?
இன்னும் ஆறு மாதங்கள் என்னிடம் வேலை பார்த்தாக வேண்டும்...'
கடைசியாய் ஒரு வேலை தந்தார்:
'இதோ பார்...! உன் குடிசைக்கு முன்னால் இருக்கும் இடத்தில் ஒரு வீடு கட்டி முடி.
பிறகு வேலையை விட்டு நின்றுகொள்.'
வேண்டா வெறுப்பாய் வேலையை ஆரம்பித்தான் மேஸ்திரி.
ஆறு மாதத்தில் முடிக்க வேண்டுமே என்று அவசரப்படுத்தினான்.
அரை குறையாக வேலை செய்தான்.
வேலையாட்களை அரட்டை அடிக்கவிட்டு
நல்ல பெயர் வாங்கிக் கொண்டான்.
தரமில்லாத சிமெண்ட் - மணல் கலவையைக் கண்டு கொள்ளவில்லை.
கட்டுமானப் பணியின் தரத்தைப் பற்றி அக்கறை காட்டவில்லை.
'நான்தான் நின்றுவிடப் போகின்றேனே...!'

ஏனோ தானோவென்று ஆறே மாதத்தில் கட்டி முடித்துவிட்டான்.
முதலாளியைச் சந்தித்து சாவியை ஒப்படைத்தான்:
'ஐயா... இதோ!
வீட்டை முடித்துவிட்டேன்.
வீட்டுக்குப் போகிறேன்.'
சாவியை வாங்கிக் கொண்ட முதலாளி சொன்னார்:
'தம்பி...
நீ ரொம்ப நாளாய் என்னிடம் மேஸ்திரி வேலை பார்த்து வருகிறாய்.
ஆனால் நீ இன்னும் குடிசை வீட்டிலேயே இருக்கிறாய்.
இத்தனை காலம் என்னிடம் உழைத்ததற்கு ஒரு பரிசு தர விரும்புகிறேன்...'
அன்போடு தொடர்ந்தார்:
'இதோ...! நீ கொடுத்த சாவி.
நீ கட்டிய அந்த வீடு உனக்குத்தான். வைத்துக்கொள்.'

**பலன் பாராது உழைத்துப் பார். உழைப்பே பலனாகும்.**

# பங்குனி 2019 மறைமாவட்ட நிகழ்வுகள்

02.03.2019 சனிக்கிழமை
: திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர் தேசிய கருத்தரங்கு.
03.03.2019 ஞாயிற்றுக்கிழமை
: பொதுக்காலம் - 8ம் ஞாயிறு.
: திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர் தேசிய கருத்தரங்கு.
04.03.2019 திங்கள்கிழமை
: திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர் தேசிய கருத்தரங்கு.
: கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய செயமர்வு.
06.03.2019 புதன்கிழமை: திருநீற்றுப் புதன்.
09.03.2019 சனிக்கிழமை
: மறைக்கல்வி ஆணையம்: தேர்வு 1, 2, 3ற்கான கருத்தமர்வு.
10.03.2019 ஞாயிற்றுக்கிழமை
: தவக்காலம் முதல் ஞாயிறு
: மறைக்கல்வி ஆணையம் - பங்குத் தரிசிப்பு.
16.03.2019 சனிக்கிழமை
: 12 மணி நேர உபவாச ஆராதனை, இறை இரக்கத் திருத்தலம்.
17.03.2019 ஞாயிற்றுக்கிழமை
: தவக்காலம் இரண்டாம் ஞாயிறு.
: 12 மணி நேர உபவாச ஆராதனை, இறை இரக்கத் திருத்தலம்.
19.03.2019 செவ்வாய்க்கிழமை
: புனித யோசேப்பு: கன்னி மரியாவின் கணவர் - பெருவிழா.
20.03.2019 புதன்கிழமை
: கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்
: தவக்காலத் தியானம்.
: புனித வின்சன்ட் டி பவுல் மறைமாவட்ட சபை
: மாதாந்தக் கூட்டம்.
22.03.2019 வெள்ளிக்கிழமை
: நற்கருணை நாதருடன் 24 மணித்தியாலங்கள்.
23.03.2019 சனிக்கிழமை: நற்கருணை நாதருடன் 24 மணித்தியாலங்கள்.
24.03.2019 ஞாயிற்றுக்கிழமை: தவக்காலம் மூன்றாம் ஞாயிறு
25.03.2019 திங்கள்கிழமை
: ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு – பெருவிழா
: உலக கிறிஸ்தவ வாழ்வுச் சமூக தினம்.
30.03.2019 சனிக்கிழமை
: தவக்காலச் சிறப்பு வழிபாடு - ஞானார்து அன்னை திருத்தலம், பாலையூற்று.
: சிறிய கிறிஸ்தவ குழுமம் (அன்பியம்) - மறைமாவட்ட ஊக்குவிப்பாளர் குழுக் கூட்டம்.
: திருவழிபாட்டு ஆணையம் - திருவழிபாட்டுக் கருத்தரங்கு.
31.03.2019 ஞாயிற்றுக்கிழமை: தவக்காலம் நான்காம் ஞாயிறு.
: எகெட்-கரித்தாஸ் - தவக்கால கல்வி ஞாயிறு.
: கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய குழுக் கூட்டம்.
: சிறிய கிறிஸ்தவ குழுமம் (அன்பியம்) - பங்குத் தரிசிப்பு.
: மறைக்கல்வி ஆணையம் - பங்குத் தரிசிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 20

# நல்லாசிரியர்: ஆளுமையும்



அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

## ஆசிரியர் : அர்ப்பணிப்பும் விசுவாசமும்

ஒரு பணியிலோ அல்லது கடமையிலோ தன்னை அர்ப்பணிக்கும் ஒருவர் அந்தப் பணியினால் அல்லது கடமையினால் ஏற்படும் விளைவுகளுக்கு பொறுப்புக் கூற மறுக்க மாட்டார். தனது பணிக்கு மட்டுமல்ல, தனது பணியின் வெளிப்பாடான விளைவுகளுக்கும். அது நல்லதோ, கெட்டதோ பொறுப்பேற்றுக் கொள்வார்.

ஒரு பாடசாலையிலோ கல்லூரியிலோ ஆசிரியர் ஒருவர் சேவை செய்ய உடன்படுவாரானால் அந்த அமைப்பில் ஓர் ஆசிரியராக செயற்பட தன்னை அர்ப்பணித்து விட்டார் என்பதே அர்த்தமாகும். அதாவது அவ்வாய்ப்பிற்கு உண்மையாகவும் நேர்மையாகவும் அவர் சேவையாற்றுவார்.

அமைப்பு என்பது பொருட்களால் ஆனதல்ல. மாறாக மனிதர்களை உள்ளடக்கியதாகும். ஆசிரியரும் ஒரு மனிதனே. அவருடைய அர்ப்பணிப்பு நேர்மையுடையதென்றால் வெறுமனே பணி செய்வதற்கு மேலாக அவ்வமைப்பின் வெற்றியிலும் தோல்வியிலும் தன்னைப் பங்காளி ஆக்கிக் கொள்வார். அந்த அமைப்பிலுள்ள அத்தனை விடயங்களிலும் கரிசனை காட்டுவார்.

ஆக, ஆசிரியரொருவர் தனது பாடசாலைக்கு அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் செயலாற்றுவார். தனது பாடசாலை எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக் கூடாதென்பதற்காக தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வார். பாடசாலைக்கு ஏதாவது எதிர்மறைத்தாக்கங்கள் ஏற்பட்டு விட்டால் அது தனக்கே நடந்தது போல் துன்பமடைவார். பாடசாலைச் செயற்பாடுகளின் வெற்றியில் மகிழ்ச்சியடைவதோடு எவ்வித எதிர்மறை விளைவுகளும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வார். அவரது வாழ்வின் பெரும்பகுதி பாடசாலையோடே பின்னிப் பிணைந்து இருக்கும். சிலருக்கு பாடசாலையே எல்லாம் என்றாகி விடுவதுமுண்டு. பாடசாலையை தனது இரண்டாவது மனை(வி) ஆக்கி வாழ்ந்த பல ஆசான்களை நாம் கண்டிருக்கின்றோம். அதிபர், ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது மன அழுத்தங்களுக்கு உள்ளானவர்களையும் நம் வாழ்வில் சந்தித்திருக்கின்றோம்.


பாடசாலை என்பது போர்க்களம் போன்றது. இங்கு போராடியே ஆக வேண்டும். கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் போது ஆசிரியரது அறியாமைக்கான போராட்டத்திலிருந்து இது ஆரம்பமாகும். இதுவே ஆசிரியரை வாழ்நாள் மாணவனாக மாற்றும். தேடலை நோக்கி ஓட வைக்கும். பாடசாலைக்குள்ளே பல தரப்பினரும் இருப்பார்கள். ஆசிரியரோடு சேர்ந்து போராடுபவர்கள், எதிர்ப்பவர்கள், பாராட்டுபவர்கள், விமர்சிப்பவர்கள், காலை வாரி விடுபவர்கள் என பல வர்க்கம் இருக்கும். பாடசாலை மேலுள்ள பிரமாணிக்கமும் விசுவாசமும் இவை யாவற்றையும் மேற்கொண்டு வெற்றி பெற ஆசிரியரொருவருக்கு பலத்தையும் ஞானத்தையும் கொடுக்கும்.

தொடரும்.................

---

சென்ற இதழ் தொடர்ச்சி ..........

# பேராயர் ஆஸ்கார் ரொமேரோ



### 32. மனித உரிமை ஆர்வலர் ரொமேரோ

கடிதம் வாசிக்கப்பட்டதற்கு பின்பு குருக்கள் மற்றும் ஆயர் இணைந்த கூட்டத்தில் அனைத்து போராட்ட யுக்திகளும் விவாதிக்கப்பட்டன. தந்தை ருட்டிலோவின் கொலை, மனித உரிமை மீறல்களில் ஓர் உச்சமாகக் கருதப்பட்டது.

இதற்கு முன்பும் வெளியேற்றல், கொடுமை மற்றும் கொலை போன்றவை நடந்து கொண்டே தான் இருந்தன. தங்கள் எதிர்ப்பை காண்பிக்கும் நோக்கில் பள்ளிக்கூடங்கள் மூன்று நாட்களுக்கு மூட திட்டமிடப்பட்டது.

எல்லா ஆலயங்களிலும் ஞாயிறு திருப்பலியை ரத்து செய்து பேராலயத்தில் மட்டும் ஒரு திருப்பலி என திட்டமிடப்பட்டது. இப்போராட்டத்தை நடத்தும்முன் ரொமேரோ பலமுறை யோசித்தார். இந்த தீவிர நடவடிக்கை அவரை அரசிடமிருந்து நில உடமையாளர்களிடம் இருந்தும் அந்நியப்படுத்தியது.

அது மட்டுமல்லாமல் பல ஆண்டுகள் நண்பர்களாக இருந்து தங்கள் குழந்தைகளுக்கு திருமுழுக்கு, முதல் நற்கருணை, திருமணம், தங்கள் பெற்றோருக்கு அவஸ்தை, அடக்கம் நடத்திய நிலஉடைமை நண்பர்கள் அவரை சந்தித்தனர். தங்கள் நீண்ட கால நட்பை நினைவு கூர்ந்தனர்.

ரொமேரோ ஒத்துழைக்க மறுத்தால் மூட்டைப்பூச்சியை நசுக்குவது போல் நசுக்கவும் தயாராக இருந்ததை தெரிவித்தனர். பள்ளிகளை மூடி ஒரே ஒரு திருப்பலியை மட்டும் நடாத்தும் திட்டத்தைக் கைவிட ரொமேரோ ஒத்துக் கொள்ளவில்லை.

அதேவேளையில் பேராயரான தொடக்கத்திலேயே உறவுகளை முறித்துக் கொள்ளவும் விரும்பவில்லை. ஆனால் தவிர்க்கவும் முடியவில்லை. போராட்டக் களத்தின் தன்மை இதுதான் என்பதைப் புரிய ரொமேரோவுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

### 33. கறுப்பு ஆட்டை அடையாளம் கண்டார் ரொமேரோ

போராட்ட யுக்திகள் செயலாக்கம் பெறும் சூழலில் திருத்தந்தையின் பிரதிநிதியுடைய கடிதம் கிடைத்தது. உடனடியாக ரொமேரோ உடன் குருவானவர் ஒருவரோடு அவரை சந்திக்கச் சென்றார். அங்கு ரொமேரோவின் செயலாளராக ஒரு மெக்சிக்கன் குருவானவர் இருந்தார்.

நில உடமையாளர்கள் பயன்படுத்திய அதே வார்த்தைகளை திருத்தந்தையின் பிரதிநிதி சொன்னார். அப்போது தனது செயலாளரே அந்த கறுப்பு ஆடு என்பதை ரொமேரோ உணர்ந்து கொண்டார். திருத்தந்தையின் பிரதிநிதி ரொமேரோவைக் கடிந்து கொண்டார். தனது எதிரிகள் யார் என்பது தெளிவாகியது.

திருத்தந்தையின் பிரதிநிதி சொன்ன வார்த்தைகளை ரொமேரோ முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. தனது செயலாளரே தனது யுக்திகளை, திட்டங்களை வெளியே சொல்லியது ரொமேரோவுக்கு வருத்தமாக இருந்தது. கறுப்பு ஆடுகள் இல்லாமல் போராட்டம் இல்லை. கறுப்பு ஆடுகளை அடையாளம் காணாமல் தலைவர்கள் இல்லை.

### 34. தலைமைக்குரு ரொமேரோ

1977ஆம் ஆண்டு மார்ச் 20ம் நாள் முதல் திட்டமிட்டபடி மூன்று நாட்கள் பள்ளி விடுமுறை.

மேலும் திருப்பலி பேராலயத்தில் மட்டும் ஒரு திருப்பலி நடைபெற்றது. அனைத்து குருக்களும் பேராயரோடு சேர்ந்து திருப்பலி நிறைவேற்றினர். ஒரு லட்சம் மக்கள் கலந்து கொண்டார்கள்.

மக்கள் சக்தியின் பெரும் அடையாளமாக அது இருந்தது. ஆனால் ரொமேரொவுக்கு அது மரண அடியாகவும் இருந்தது. குறுகிய காலத்தில் மேலிடத்தில் தனக்கு ஆதரவாக உள்ளவர்களை விட தனக்கு எதிரிகள் அதிகம் இருப்பதைக் கண்டு கொண்டார்.

அதேவேளையில் இரண்டாம் வத்திக்கான் மற்றும் 1968இல் மெடலின் பேராய நிகழ்வுகளின் போது எதிரியாக இருந்தவர்கள் இப்போது நண்பர்களானார்கள். ரொமேரோ தான் ஒரு தலைமைக்குரு என்பதையும் மக்கள் நலனுக்காக அனைவரையம் ஒருங்கிணைக்கும் தலைமைப்பண்பு தனக்குண்டு என்பதையும் நிருபித்தார்.

### 35. மக்கள் சக்தி

அனைத்து பங்குகளிலும் ஞாயிறு திருப்பலிகள் ரத்து செய்யப்பட்டு பேராலய வாசலில் ஒரு திருப்பலி நிறைவேற்றப்படும் என்ற தைரியமான அறிவிப்பினால் இத்திருப்பலிக்கு 1 இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த உண்மை அரசு தரப்பாலும், ஆளும் வர்க்கத்தாலும், திருச்சபையில் ஒரு பகுதியினராலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் ஆளும் வர்க்கத்திற்கெதிராக மக்கள் ஒன்றாக இணைந்தனர்.

அருட்பணி குஸ்தாவோ குட்டியரஸ் சொன்னது போன்று "கடவுளை அறிந்து கொள்வது நீதியை நிலைநாட்டுவது" என்பது ரொமேரோவின் வாழ்வில் தாமதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இத்தனை பெரிய கூட்டத்தைக் கூட்டியது மக்களிடையே பேராயருக்கு இருந்த மரியாதையையும் நீதியின்பால் உள்ள தாகத்தையும் அப்பட்டமாக வெளிக்காட்டியது. இவர் மக்கள் சக்தியின் வடிவம் என்பது தெளிவானது.

### 36. ஆவணப்படுத்தலும் ரொமேரோவும்

நீதியை நிலைநாட்டும் முயற்சியில் அவரது சாதனையாக கருதப்படுவது மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்த உருவாக்கப்பட்ட நிரந்தர மறைமாவட்ட ஆணைக்குழு ஆகும். 1979இல் வத்திக்கானில் திருத்தந்தையை ரொமேரோ சந்தித்த போது, எல் சால்வதோரின் நிறுவனமயமான கொலை, துன்புறுத்தல், கடத்தல் என ஏழு அறிக்கைகளைக் கொடுத்தார்.

ரொமேரோ சகோதர கிறிஸ்தவர் என்ற முறையில் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டருக்கு, எல் சால்வதோர் அரசுக்கு இராணுவ உதவி அனுப்புவதை நிறுத்துங்கள் என கடிதம் எழுதினார். ஆனால் கார்ட்டர் செவிமடுக்கவில்லை. இருப்பினும் 4 ஆலய பெண்கள் கொலை செய்யப்பட்டபோது 1980இல் உதவுவதை நிறுத்தினார்.


ரீகன் அமெரிக்க ஜனாதிபதியான போது மீண்டும் உதவத் துவங்கினார். மொத்தமாக 12 ஆண்டுகளுக்கு ஒரு நாளைக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டாலர் உதவியாக எல் சால்வதோருக்கு கொடுக்கப்பட்டது.

நன்றி

தொடரும்.................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை வழி வாழ்வு




வார்த்தை:
எபிரேயர் மடல் கூறுகிறது:

'தூய்மையை நாடுங்கள், தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார்'
(எபிரேயர் 12:14).

**விளக்கம்:**

இங்கு மனிதர்கள் கடவுளைக் காண்பதிலுள்ள நிபந்தனை முன்வைக்கப்படுகின்றது. கடவுளைக் காண வேண்டுமா தூய்மை உள்ளவனாக / உள்ளவளாக இரு என்பதேயாகும் அவ் நிபந்தனை.

தூய்மை அல்லது புனிதம் குறித்து விவிலியமும் பல்வேறுபட்ட சமய, உலக இலக்கியங்களும் பேசுகின்றன.

1. மத்தேயு நற்செய்தியாளர் தமது நற்செய்தியின் அடிநாதமாகிய மலைப்பொழிவின் பேறுகளுள் ஒன்றாக தூய்மையினை பயன்படுத்துகின்றார்: 'தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்' (மத்தேயு 5:8).
2. 'எனக்கெனத் தூயவர்களாக இருப்பீர்களாக! ஏனெனில், ஆண்டவராகிய நான் தூயவராயிருந்து நீங்கள் என்னுடையவர்களாக இருக்கும்படி உங்களை மக்களினங்களினின்று பிரித்தெடுத்தேன்' (லேவியர் 20:26) என்றுகூறி தூய்மை வாழ்வுக்கு நம்மை அழைக்கின்றது.
3. 'நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறவேண்டியது: தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!' (லேவியர் 19:2) எனக்கூறி தூய்மை வாழ்வு இறைவனின் அழைப்பு என சான்று பகர்கின்றது.
4. 'கடவுளுக்கு அடுத்தது தூய்மை' 'Cleanliness is next to Godliness' என்கின்ற ஆங்கில சொற்றொடரினை முதன்முதலாக மெதஸ்டித திருஅவையின் அருட்திரு ஜோன் வெஸ்லி 1778ஆம் ஆண்டு தமது மறையுரையில் பயன்படுத்தினார். அதுவே இன்று ஆங்கிலத்தில் பிரசத்திபெற்ற சொற்றொடராகவும் உள்ளது.
5. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன், ஆகுல நீர பிற' எனும் வள்ளுவப் பெருந்தகையின் குறளோவியம் கூறுவது யாதெனில் மனத்தில் குற்றம் இல்லாதவன் ஆகுதலே எல்லா அறங்களுக்கும் மூலமாகும். மற்றவை ஆரவார பகட்டுகளேயாம்.

**வினாக்கள்:**

எனது தூய்மை வாழ்வினைக்குறித்து நான் என்ன சொல்லிவிட முடியும்? தூய்மை வாழ்வினைக் குறித்த இன்றைய யதார்த்தங்கள் யாவை?

- எனது திருமண புனிதத்துவ வாழ்விற்கு, பிராமாணிக்கத்திற்கு தூய்மையுள்ளவனாக / தூய்மையுள்ளவளாக இருக்கின்றேனா?
- எமது குருத்துவ, துறவற அர்ப்பண வாழ்வின் தூய்மைக்கு, புனிதத்துவ அழைப்பிற்கு பிரமாணிக்கம் உடையவர்களாக இருக்கின்றோமா?
- எமது சகோதர நட்பிலும், அயலவர் அன்பிலும் புனிதம் பேணுகின்றோமா?
- எமது ஒழுக்கவியல் வாழ்வில் திருச்சபையின் படிப்பினைக்கும், கற்பித்தலுக்கு பிரமாணிக்கமாக நடக்கின்றோமா?
- காவியுடையும், வெள்ளையுடையும் அணிவதால் புனிதம் வந்து விடுகின்றதா?
- ஊழலும், கையூட்டும் மலிந்து நிறைந்து காணப்படும் உலகில் புனித வாழ்விற்கு இடம் உண்டா?
- கறைபடிந்த கரங்களுடன் உலா வருகின்ற பொல்லாத அரக்கப் பேர்வழிகள் நிறைந்த மானிட வாழ்வில் தூய்மைக்கு இடமுண்டா?

**நிகழ்வு:**

விடுதலைப்பயணம் 3ஆம் பிரிவில் விடுதலை வீரர் மோசே தன் மாமனார் இத்திரோவின் மந்தைகளை மேய்த்து வந்தார். மேய்த்துக்கொண்டு ஓரேபு மலைக்கு வந்தார். அப்போது ஆண்டவரின் தூதர் எரியும் முட்புதரில் அவருக்கு தோன்றினார். முட்புதர் எரிந்தாலும் தீய்ந்து போகவில்லை. ஏன் அவ்வாறு நடக்கவில்லை என்பதனை பார்ப்பதற்காக மோசே அதனருகே செல்ல முயன்றார். அப்போது ஆண்டவர் அவரையழைத்து ?இங்கே அணுகி வராதே, உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு, ஏனெனில், நீ நின்றுகொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்? என்றார். இது நமக்கு கூறுவது யாதெனில் தூயவரைக்காண, சந்திக்க உன்னில் தடையாகவுள்ள உன் அசுத்தத்தை அகற்றிவிடு என்பதாகும்.

**செய்தி:**

இன்று அகக்காரணிகளும், புறக்காரணிகளும் நமது தூய்மையினை சிதைக்கின்றன. அவற்றுள் புறக்காரணிகளாக வீதியில் வீறிட்டுப் பாய்கின்ற வாகனங்களின் நச்சுப் புகைகள், காற்றினில் கலக்கின்ற தொழிற்சாலைகளின் அசுத்த வாயுக்கள், அன்றாடக் கழிவுகளால் நிரம்பி வழியும் குப்பைகள், குடிநீரில் கலக்கின்ற நச்சுத் திரவங்கள், வயல் மற்றும் பயிர் நிலங்களில் தெளிக்கப்படுகின்ற கிருமி நாசினிகள், அதிகூடிய பொலீத்தீன் பாவனை என்று அடுக்கிய வண்ணமே செல்லலாம்.

மறுபக்கத்தில் அகக்காரணிகளாக நமது சிந்தனை, சொல், செயல் போன்றவற்றை சிதைக்கின்ற காரணிகளை பட்டியலிடலாம். மகாத்மா காந்தியின் அறையினுள் காணப்பட்ட மூன்று குரங்குகளின் உருவம் கூறுகின்ற செய்தி யாதெனில் கண்களை மூடிய குரங்கு தீயதை பார்க்காதே என்றும், காதுகளை மூடிய குரங்கு தீயதைக் கேளாதே என்றும், வாயினை மூடிய குரங்கு தீயதைப் பேசாதே என்றும் நமக்கு அறைகூவல் விடுக்கின்றன. எனவே எமது புலன்களால் தீயவை நாடாமலும், தேடாமலும் இருப்போம். அதுமட்டும் போதாது தீமையினைப் புரிந்து நமது தூய்மையினை சிதைவடையாமலும் பார்த்துக்கொள்வோம்.

"நாம் உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப்படுத்துவோம். கடவுளுக்கு அஞ்சித் தூய வாழ்வில் நிறைவடைவோம்" (2 கொரிந்தியர் 7:1). நன்மையால் தீமையை வென்று தூயோராய் அழைப்புக்கேற்ப வாழ்வோம்.

**பிறிதொரு பகிர்வுடன்**
**அருட்பணி நவாஜி**

# சொல்லிக் கொடுங்க

என்ன யோசிக்கிறீங்களா? இப்படியொரு தலைப்பா என. இன்றைய காலத்தில் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்ப்பதில் பெற்றோர் படும்பாடு பெரும்பாடு. எந்தப் பெற்றோரைச் சந்தித்தாலும் பிள்ளைகள் சொல்லு கேட்கிறார்கள் இல்லையே என ஆதங்கப்படுவதைக் காணலாம். பெற்றோர்களே அடிப்படை 'நல்ல விடயங்கள் பத்து' இதனை அன்பாக சொல்லிக் கொடுக்கிறீர்களா?

01. காலையில் எழுந்தவுடன் 'எல்லாம் வல்ல இறைவனை போற்றவும், வணங்கவும் இறைவார்த்தையை வாசிக்க தியானிக்கவும் சொல்லிக் கொடுங்க.



02. வீட்டில் வாழ்பவர்களுடன் இனிமையாகப்பேசவும், அன்பாகப் பழகவும் வேண்டும் என சொல்லிக் கொடுங்க.



03. ஒவ்வொரு நாளிலும் பழகும் நண்பர்கள், உறவுகள், கற்பிப்பவர்கள் இடையே குற்றங்கள், பிழைகள் விடும்போது Sorry சொல்லவும் உதவிகள் கிடைக்கும் போது Thanks சொல்லவும் ஏதும் விடயங்கள் கோரும் போது Please போன்ற சொற்களை பயன்படுத்த வேண்டும் என்பதை சொல்லிக் கொடுங்க.



04. நேரத்தை வீணாக செலவழிக்க காத்திருக்கும் சினிமாக்கள், தொடர் நாடகங்கள், Phone பாவனை, அரட்டை அடிக்கும் நண்பர்கள் இவைகளை தவிர்க்கும்படி சொல்லிக் கொடுங்க.



05.உங்கள் பிள்ளைகளின் நண்பர்கள், ஆசிரியர்கள், அயலவர்கள், உறவுகள் போன்றோர்க்கு ஏதும் சுகயீனம் என்றால் "கட்டாயம் போய் பார்க்க வேண்டும்" என்பதைச் சொல்லிக் கொடுங்க.



06. படிக்கும் காலத்தில் தேவைக்கு மேலான பணப்புழக்கத்தை தவிர்க்கும்படி சொல்லிக் கொடுங்க.



07. வாரத்தின் கடன்திருநாளை (ஞாயிறு) புனிதமாக கடைப்பிடிக்க சொல்லிக் கொடுங்க.



08. ஒருபோதும் "பொய் சொல்லக் கூடாது, களவு எடுக்க கூடாது" என்று சொல்லிக் கொடுங்க.



09. ஆசிரியர்கள், மதகுருக்கள், பெரியோரைக் கனம் பண்ண வேண்டும் என்று சொல்லிக் கொடுங்க.



10. படுக்கைக்கு போகுமுன் அன்றைய நாளில் பிள்ளைகள் செய்த நல்ல காரியங்கள், தகாத காரியங்கள் பற்றி ஒரு சில நிமிடம் சிந்திக்கவும் அனைவருக்காகவும் வேண்டி இறைவனுக்கு நன்றி கூறி நித்திரைக்குச் செல்ல சொல்லிக் கொடுங்க.



பெற்றோர்களே! திரும்ப திரும்ப அன்பாக சொல்லிக் கொடுத்துத் தான் பாருங்களேன். நல்ல பயனைக் காண்பீர்கள். அதற்கு முன்பாக உங்கள் முன்மாதிரியான வாழ்க்கை முறையே அவர்களுக்கு வழிகாட்டி. அத்துடன் உங்கள் நல்ல வாழ்க்கை அனுபவங்களை பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளுங்க.

சரோஜினி சிறில்பத்திநாதன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர் )

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேட்டதும் கற்றதும்

ஆன்மீகம் மனதிற்கு இதமூட்டுவது கவலைகளைப் போக்கி எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டுமென வழிகாட்டுவது. தொடர்பு சாதனங்களின் வலைக்குள் சிக்குண்டு இறைவிசுவாசத்தில் பற்றற்று வாழும் எம்மவர்களை காக்க வல்லது இவ் இறை ஆன்மீகமே. அந்த வகையில் திருகோணமலை உவர்மலை குழந்தை இயேசு ஆலய வருடாந்த நவநாட்களின் மறை உரையில் பல்வேறு தலைப்புக்களில் வார்த்தை பகிர்வு இடம்பெற்று ஆன்மீக விசுவாசத்தில் இறைமக்கள் வலுவூட்டப் பெற்றார்கள்.

இவ்வாண்டின் கருப்பொருளில் ஒன்றான இறைவார்த்தை வாசிப்பில் நாளும் படிப்போம். இறைவார்த்தை எனும் தலைப்பில் ஆழ்ந்த பல கருத்துக்களை வேதாகமத்திலிருந்து தொட்டு சுவைத்து அனுபவித்து எங்களையும் அனுபவிக்க வைத்த அருட்பணி இ. யூட் சர்வானந்தன் அவர்களின் மறை உரையிலிருந்து கேட்டதையும் கற்றதையும் உங்களோடு பகிர விரும்புகின்றேன்.

நாளும் படிப்போம் இறைவார்த்தையினை எனும் கருப்பொருளில் ஆண்டவர் இயேசுவினுடைய உயிருள்ள நற்செய்தியை உங்களுக்கு அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எமது மறைமாவட்டத்தில் இறைவார்த்தை வாசிப்பு ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்று உலகில் மனிதர்கள் உழைப்பு- நேரமில்லை, பொழுதுபோக்கு, களியாட்டம், சினிமா, சீரியல்கள் என்று பிஸியாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். வாசிக்கும் பழக்கம் அற்றுப் போகும் காலச் சூழலில் இறைவார்த்தை வாசிப்பை ஆழப்படுத்த ஆண்டவர் இயேசு நம் ஒவ்வொருவர் மேலும் சித்தம் கொண்டுள்ளார். இறைவார்த்தை வாசிப்பதன் மூலம் நமக்கு கிடைக்கும் ஆசிர்வாதங்களும் நன்மைகளும் எண்ணிக்கையில் அடக்க முடியாது.

நாம் வேதம் / பைபிள் கொடுக்கின்ற ஆசிர்வாதங்களை பெற முதலிலே கடவுளுடைய வார்த்தைக்கு எப்படிப்பட்ட வல்லமை உண்டு என்பதை முதலிலே அறிந்து கொள்ள வேண்டும்.

1. ஆண்டவருடைய வார்த்தைக்கு வல்லமை உண்டு

"ஆண்டவருடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது" (எபிரேயர் 4: 12)

I. ஆண்டவருடைய வார்த்தை உயிர் கொடுக்கும் வல்லமை நிறைந்தது.

❖ வார்த்தையான இறைவன் மனுவுரு எடுத்தார் என்பதை யோவான் நற்செய்தி 1:14 தெளிவுபடுத்துவதைக் காண்கின்றோம்.

❖ எசாயா 38:1-5இல் நோய்வாய்ப்பட்டு சாகும் தருவாயில் அழுது மன்றாடிய செதேக்கியா அரசனுக்கு எசாயாவின் இறைவாக்கின் மூலம் அவன் ஆயுள் மேலும் 15 ஆண்டுகள் நீடிக்கப்பட்டு உயிர் வாழ்ந்தான்.

❖ எசே 37:1-14 எசேக்கியல் உலர்ந்த எலும்புகளுக்கு இறைவாக்கு உரைக்கவே உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று எழுகின்றன.

❖ யோவா 11:43இல் இறந்து அடக்கம் செய்யப்பட்ட இலாசரைப் பார்த்து "இலாசரே கல்லறையை விட்டு வெளியே வா" என்று இயேசு கூறிய போது உயிரோடு எழுந்து வந்தான்.

2. ஆற்றல் வாய்ந்த வார்த்தை / சக்தி வாய்ந்த வார்த்தை

I. தொ. நூ1:3,6 'ஒளி தோன்றுக, வானம் தோன்றுக" வெறும் "தோன்றுக" என்னும் சொல்லில் உலகைப் படைக்கும் ஆற்றல் கடவுளுடைய வார்த்தைக்கு உண்டு.

II. மாற் 4:39 கடலிலே எழுந்த காற்றையும் புயலையும் "இரையாதே அமைதியாய் இரு" என்று சொல்லி அதட்டி அடக்குகின்ற ஆற்றல் இறைவார்த்தைக்குண்டு.

3. பலன் கொடுக்கின்ற வார்த்தை

I. எசா 55:10-11இல் வானத்தில் இருந்து பெய்கின்ற மழையும் பனியும் எவ்வாறு உண்பவனுக்கு உணவையும் விதைப்பவனுக்கு விதையையும் கொடுத்து பயன் கொடுக்கின்றதைப் போல் வார்த்தை பயன் கொடுக்கின்றது.

II. மாற் 4:20 இறைவார்த்தையை ஏற்று கடைபிடிப்போர் 30, 60,100 மடங்கு என பலன் கொடுப்பார்கள்.

III. மத் 7:24 "என் வார்த்தையைக் கேட்டு செயல்படுகின்றவர்கள் பாறை மீது வீடு கட்டியவனுக்கு ஒப்பானவர்கள்"

4. அழியாத வார்த்தை

மத் 5:18 "விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும், ஆனால் என் வார்த்தைகளோ ஒழியவே மாட்டா" கடவுளின் வார்த்தை அழியாத வல்லமை கொண்ட வார்த்தை.

5. துன்பத்தில் ஆறுதல் அழிக்கும் வார்த்தை

I. தி.பா 119:50 சொல்கிறது உம் வார்த்தை துன்பத்தில் ஆறுதல் அளிக்கிறது.

II. யோவா 16:20 "உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்" என்று கிறிஸ்து ஆறுதல் சொல்கின்றார்.

6. மன்னிப்பை கொடுக்கின்ற இறைவார்த்தை

I. லூ 7:48 பாவிப் பெண்ணைப் பார்த்து சொல்கிறார், "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

II. மாற் 2:5 இல் திமிர்வாதக்காரனிடம் "மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

7. மீட்பை வாழ்வைக் கொடுக்கின்ற வார்த்தை

I. லூக்19:9 "இன்றே இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று"

II. யோவா 6:68 : "ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம், நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன"

**இயேசுக் கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே,**

இப்படிப்பட்ட உயிருள்ள, ஆற்றல்மிக்க வல்லமைமிக்க, ஆறுதல் கொடுக்கின்ற, அழியாத வாழ்வைக் கொடுக்கின்ற இறைவார்த்தைக்கு நம் தனிப்பட்ட வாழ்விலும், வீடுகளிலும், ஆலயத்திலும் நாம் எத்தகைய முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றோம்..............

♦இன்று அனேகமான வீடுகளில் Bibleஇல் தூசி படிந்த நிலையிலே கவனிப்பாரற்று உயிரற்ற நிலையில் இறந்து கிடப்பதை நாம் காண்கின்றோம்.

♦சிலர் Bibleஐ எதற்காக பயன்படுத்துகின்றார்கள்?

காசு- பணத்தை ஒளிந்து வைக்க, Current Bill, Water Bill இல்லையென்றால் அடகு வைத்த Recept பகுத்திரப்படுத்தி வைக்கும் இடமாக பயன்படுத்துகின்றார்கள்.

♦அனேகருடைய குடும்ப புத்தகங்கள் Bible என்னும் Cupboardஇற்குள் தான் இருக்கும்.

♦ஆலயத்தில் வாசகம் வாசிக்க அனேகருக்கு வெட்கம், பயம். சிலர் சாக்கு போக்கு சொல்லி வாசிக்க மறுத்து ஓடி விடுவார்கள் (சினிமா Dialogues சரவெடி, அத்துப்படி)

♦அனகமானவர்களுக்கு தங்கள் வாழ்க்கைக்கென்று இலட்சிய இறைவார்த்தை/ பிடித்தமான இறைவார்த்தை இல்லை.

கதை

ஆலயத்தில் பங்குக் குருவானவர், ஞாயிறு திருப்பலியில் மறையுரையாற்றும் போது முன் வரிசையில் இருந்த ஒரு வயது போன தாத்தா மெய்மறந்து நன்றாக குறட்டை விட்டு தூங்கினார். குருவால் பிரசங்கத்தை தொடர அசௌகரியமாக இருந்தது. பொறுமையிழந்த குருவானவர் தாத்தாவின் பக்கத்தில் இருந்த பேரனைப் பார்த்துச் சொன்னார், "டேய் உங்க தாத்தா கொறட்ட விட்டுத் தூங்குறாரே கொஞ்சம் தட்டி எழுப்புடா" என்றார். உடனே பையன் குருவானவரைப் பார்த்துச் சொன்னான், "பாதர் நீங்கதானே தாத்தாவ நித்திரையாக்கினீங்க..... நீங்களே எழுப்புங்க......" என்று சொன்னானாம்.

♦இப்படி இறைவார்த்தையைக் கேட்க விருப்பமில்லாதவர்கள் சிலர் ஆலயங்களில் நடந்து கொள்வதும், இறைவார்த்தை முழக்கத்தின் போது சிலர் ஆலயத்துக்கு வெளியே சென்று கதைப்பதும், தொலைபேசியை நோண்டுவதும் அனேகமான இடங்களில் இடம்பெறுகின்றன.

♦சிலர் தூக்கம் வராவிட்டால் பைபிள் படிக்கிறார்கள், அப்போது விரைவாக நித்திரை வரும் என்பதும் இவர்கள் ஐதீகம். (இதுதான் பலர் இன்று வார்த்தை வல்லமைக்கு கொடுக்கும் முக்கியத்துவம்)

**II. ஆண்டவரின் வார்த்தையை கடைபிடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்**

ஆசீர்வாதங்கள் ஐஸ்வர்யங்கள் நிறைந்திருக்கும்.

■தொ. நூ12:1-3 ஆண்டவர் ஆபிரகாமுக்கு சொன்ன வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்தார், கீழ்ப்படிந்தார்அவர் வாக்குப் பண்ணிய ஐஸ்வர்யங்கள் ஆபிரகாமின் வாழ்வில் நிறைவேறின.

■லூக் 1:38இல் அன்னை மரியாள் "இதோ ஆண்டவரின் அடிமை" என்று இறைவார்த்தையை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிந்ததால் கடவுளின் தாயாக, மனுக்குலத்தின் அன்னையாக ஆசிபெற்றார்.

தூய ஆவியைக் கொடுக்கின்றது.

■யோவா 6:63 "நான் கூறிய வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன. தூய ஆவியின் அபிஷேகம் வார்த்தையினால் கிடைக்கின்றது.

நாம் விரும்பி கேட்பது நடக்கும் / நம் விண்ணப்பங்கள் நிறைவேறும்

■யோவா 15:7 "நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பி கேட்பதெல்லாம் நடக்கும்." இன்று எமது மன்றாட்டுக்கள் கேட்கப்படுவதில்லையே என்று நாம் கடவுளை குறைகூறி விசனப்படுகின்றோம். ஆண்டவரின் வார்த்தையில் நிலைத்தால்எல்லாம் கிடைக்கும் என்பது வேதம் நமக்கு கற்றுத் தரும் பாடம்.

நம்மை மேலாக உயர்த்துவார்.

■இ.ச 28:1-14இல் ஆண்டவரது வார்த்தையைக் கடைப்பிடிக்கும் போது கடவுள் எத்தகைய நன்மைத்தனத்தைக் கொடுத்து மேலாக உயர்த்துவார்என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

குணமளிக்கின்றன, பாதுகாப்பளிக்கின்றன.

■தி.பா 107:20 " தம் வார்த்தையைஅனுப்பி அவர் அவர்களைக் குணப்படுத்தினார், அழிவினின்றுஅவர்களை விடுவித்தார்."

மன்னிப்பை பெறுகின்றோம்.

■மாற் 2:5 "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன"

ஆறுதல்/விடுதலை பெறுகின்றோம். இயேசுவின் சீடர்களாய் மாறுவோம்.

■யோவா 16:20 "உங்கள் துயரம் மகிழ்ச்சியாய் மாறும்"

■யோவா 8:31இல் இயேசசொல்கிறார் "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்."

III. Bible அவசியம்

அன்புக்குரியவர்களே, இன்று ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் இறைவார்த்தை கண்டிப்பாக தேவை ஏனென்றால் "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு: என் பாதைக்கு ஒளியும் அதுவே" தி.பா 119:105. இயேசுவிற்கு முன்பும் பின்பும் உருவாக்கப்பட்ட இறைவார்த்தைகள் உலகின் கடையெல்லை வரை நிறைவேறி வருவதை நாம் காண்கின்றோம். இயற்கை அழிவுகள், பூமி அதிர்ச்சி, கடும் மழை, கடும் பனி, அரசியல் குழப்பங்கள், கொடிய கொள்ளை நோய்கள், நாடுகளுக்கு எதிரான யுத்தங்கள், கொடிய பஞ்சங்கள் (லூக் 21:7-12). நம்முடைய வீடுகளில் இறைவார்த்தையை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை இணைச்சட்ட புத்தகம் 6:6-9 கற்றுத்தருகின்றது. வீடுகளில் ஒவ்வொருவருக்கும் ஒரு Bible தேவை. ஏனென்றால் இறைவார்த்தை இஸ்ராயேல் மக்களை பாலைநிலத்தில் வழிநடத்தியது போல் நம்மையும் வழிநடத்தும்.

கதை

ஒருவர் பைபிள் வாசிக்க விரும்பி கண்ணை மூடி ஒரு பகுதியைத் தொட்டுத் தெரிந்தார். அவருக்குக் கிடைத்த பகுதி யோவா 4:8 "இப்போது இருப்பவரும் உம் கணவர் அல்ல...." உடனே அவருக்கு டென்ஷன் வந்துவிட்டது.

இன்னுமொருவர் கண்ணை மூடி ஒரு பகுதியைத் தொட்டுத் தெரிந்தார். மத் 27:5 "யூதாசு நாண்டு செத்தான்" அதென்னப்பா என்டு இன்னொரு பகுதியை எடுத்துப் பார்த்தார். அவருக்கு மீண்டும் வந்த வார்த்தை "நீரும் போய் அப்படியே செய்யும்" லூக் 10:37

இப்படி தவறுதலாக, தப்பாக கண்களை மூடி தெரிவு செய்து Bible ஐ படிக்காமல் புரியும்படியாகவும், தெளிவாகவும் படிக்க வேண்டும்.

I. இயேசு இறைவாக்குச் சுருளை பிரித்துப் படித்தார். (லூக் 4:16-17)

நாமும் Bibleஐ ஒவ்வொரு நாளும் விரித்து விசுவாசத்தோடும், ஆற்றலோடும் படிக்க வேண்டும்.

II. மோசே இறைவார்த்தையை எழுதிப் படித்தார் ( வி.ப 34:27) குறிப்பு எழுதி விவிலியம் படிக்க வேண்டும்.

III. எஸ்ரா இறைவார்த்தையை மக்களுக்கு புரியும்படி தெளிவாகவும் பொருளோடும் உரத்த குரலில் வாசித்தார். (நெகே 8:8)

விவிலியத்தை உரத்த குரலில் வாசித்து படிக்க வேண்டும்.

**அன்பிற்குரியவர்களே**

1. விவிலியத்தை விரித்துப் படியுங்கள்
2. விவிலியத்தை உரத்த குரலில் தெளிவாகவும் பொருளோடும் படியுங்கள்
3. விவிலியத்தை எழுதி குறித்து வைத்துப் படியுங்கள்.

ஏனென்றால் இயேசு சொல்கிறார் "நான் கூறிய வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றது" (யோவான் 6:63). ஆகையால் அன்புக்குரியவர்களே! இறைவார்த்தை நமக்குள்ளே ஒவ்வொரு நாளும் விதைக்கப்பட வேண்டும்.

1. இறைவார்த்தை நமக்குள் விதைக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். (மத் 13: 18-23)
2. விதைக்கப்பட்ட வார்த்தை தங்க வேண்டும். (லூக் 24:29)
3. தங்கிய இறைவார்த்தை இதயத்தில் பதிய வேண்டும். (இ.ச 6:7)
4. பதிந்த வார்த்தையை வாழ்வாக்க வேண்டும் (யோவா 15:7-8)
5. வாழ்வாக்கிய வார்த்தையை அறிவிக்க வேண்டும். (மாற் 16:15)

எனவே அன்பிற்குரியவர்களே இறைவார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, வல்லமை மிக்கது, ஆறுதல் கொடுக்கிறது, ஆவியைக் கொடுக்கிறது என்பதை உணர்ந்தவர்களாக நாளும் இறைவார்த்தையைப் படித்து எம் வாழ்வுக்கு அதனை விளக்காக்குவோம் என்ற அவரின் ஆழமான கருத்துக்கள் எம் பங்கை மட்டுமல்ல எம் கிறிஸ்தவ சமூகத்தையே விழிப்படைய வைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கில் இதனை தொகுத்து வெளியிடுவதில் பெருமையடைகின்றேன்.

தொகுப்பு : "உவர்மலை நதி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொட்டியாரத்தான்
## இறையுள் துயிலானார்

கால கடவுள்
அழுத வெள்ளமாய்
கரைத்த கவி
என் அப்பா

எழுதியவை எல்லாம்
திருமலை தீபம்
தொண்டன் வெட்டாப்பு
வேறேதும் இல்லை

காரியாலய ஊழியன்
கவிதையின் காதலன்
நண்பரின் நாயகன்
இவர் சுற்றம்

வலி வேதனை
வாட்டி வதைக்கிறது
அப்பா அறிந்தவர்
அன்பாய் ஏற்கவும்

மாறாத ஒழுக்கம்
மயங்காத நேர்மை
பொய்யில்லா புன்னகை
இவர் குணம்

அப்பாவாய் கிடைக்க
பெற்றது பாக்கியம்
மகன் தந்தைக்கு
ஆற்றும் செயல்

தான் வாழ(ழா)
நினைத்த எல்லாம்
நான் வாழ
வழி செய்தவர்

அவர் சொல்
நான் பொருள்
எழுதவில்லை இதுவரை
இனி எழுதுவேன்??

நாம் மறந்த
தமிழின் மொழி
இவர் கவியின்
கலை உடல்

என்றும் அன்புடன்
கொட்டியாரத்தான் கடைக்குட்டி
ம. றொஷின்ரன் கொறேயிரா

## நோன்புகள் நம் மாண்புகள்



தவக்காலம் கிறிஸ்தவர்களாகிய நமக்கு நோன்பின் மாண்பை உணர்த்துகின்றது.
மாறிவரும் நவீனச் சூழலுக்கேற்ப, நமது நோன்புகள் எண்ணிக்கையிலும் தரத்திலும் மாற்றம் காண்கின்றன.

**✞ வெள்ளிதோறும் தொலைக்காட்சி நோன்பு**
வெள்ளியன்று முடிந்தால் நாள் முழுவதும் தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்க்கலாம்.


**✞ வெள்ளிதோறும் அலைபேசி நோன்பு**
முடிந்தால் அனைத்து ஊடகப் பயன்பாடுகளையும் வெள்ளியன்று விட்டுவிடலாம். தவிர்க்க முடியாத பணிசார்ந்த அழைப்புக்களை மட்டும் ஏற்கலாம்.

**✞ வெள்ளி தோறும் இணையத்தள நோன்பு**
முடிந்தால் இணையத்தளப் பயன்பாட்டை இன்று முழுவதும் தவிர்க்கலாம். அல்லது பணிக்கு மட்டும் பயன்படுத்தலாம்.


**✞ நாள்தோறும் சொல் நோன்பு**
பேச்சைக் குறைத்து செயலை அதிகரிக்கலாம். பயனற்ற இழிவான சொற்களை அறவே தவிர்க்கலாம். 'கேட்போர் பயனடையும்படி, தேவைக்கேற்றவாறு, அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளை (எபே 4:29) மட்டுமே பேசலாம்.

எங்களுக்காகச் சிலுவை மரணத்தை ஏற்க முன்வந்த இயேசுவே, உமக்காகவும் எங்கள் நல் வாழ்வுக்காகவும், இந்தச் சமூகத்தின் மேம்பாட்டுக்காகவும் நாங்கள் இந்த நோன்புகளை கடைப்பிடிக்க உமது தூய ஆவியாரால் நிரப்பியருளும், ஆற்றலையும் தாரும்.

# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்



## 2. மகிழ்ச்சியாய் இருப்பது நன்று



நாம் அன்றாடம் பல மனிதர்களைச் சந்திக்கின்றோம். அவர்களில் சிலர் எப்போதும் சிரித்த முகத்துடனேயே இருப்பார்கள். வேறு சிலர் எப்போதம் சோகமான முகத்துடன் காட்சியளிப்பார்கள். இதைக் கொண்டு சிரித்த வண்ணம் இருப்பவர்களுக்கு வாழ்க்கையில் எந்தப் பிரச்சனையும் இல்லையென்றோ, சோக முகத்துடன் இருப்பவர்களுக்குப் பிரச்சனை அதிகம் என்றோ எண்ணுவது தவறு. எல்லோருக்கும் பிரச்சினை உண்டு.

மகிழ்ச்சி என்பது ஒரு மனநிலையாகும். துன்பம் வந்துவிட்டதே என்று துயரப்பட்டுக் கொண்டிருந்தால் மேலும் துன்பம் அதிகரிக்குமே தவிர குறையாது. சிரித்தால் பிரச்சனை, துன்பம் ஓடிவிடுமா? இல்லை. ஆனால் சிரிக்கும் போது மனம் அமைதியடைகிறது. துன்பத்தை நீக்குவதற்கான மனநிலையை அது கொடுக்கிறது எனலாம். பிரச்சினை, துன்பம் சொல்லிக் கொண்டு வருவதில்லை. இவற்றை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டுமானால் நாம் மகிழ்ச்சியுடனும் மனத் தெளிவுடனும் இருக்க வேண்டும்.

எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பது எமது தோற்றத்துக்கு அழகைக் கொடுக்கக் கூடியதாகும். மற்றவர்களும் அதைப் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள். உங்களிடமுள்ள மகிழ்ச்சி உங்களைச் சுற்றிலுமுள்ளோரையும் மகிழ்ச்சியாய் இருக்கத் தூண்டுகிறது. அதாவது அவர்களும் மகிழ்ச்சி உணர்வைப் பெறுகிறார்கள். நாம் மகிழ்ச்சியாய் இருக்கும்போது மற்றவர்களும் எம்மை விரும்புவார்கள். நாம் தனிமையிலே வாழப் பிறந்தவர்களல்லர். மற்றவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும். மனித உறவு மனிதனுக்குத் லேவை. இந்த உறவுக்கு மகிழ்ச்சியான முகம் அவசியம். சோகத்துடனும், வெறுப்போடும் இருப்போருடன் உறவு கொள்ள மற்றவர்கள் விரும்புவதில்லை.

பிரச்சினைகளும், போராட்டங்களும் நிறைந்த மனிதனால் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? என்பது ஒரு கேள்வி. மகிழ்ச்சி என்பது ஒரு மனோநிலையாகும். பிரச்சனை, துன்பம், சோர்வு இவைகள் மனிதனை வெளியிலிருந்து தாக்குகின்றன. மகிழ்ச்சியோ உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கின்றது.

ஒருவன் தான் மகிழ்ச்சியாய் இருப்பதாக முதலில் எண்ண வேண்டும். எமக்குள் இருக்கும் மகிழ்ச்சியை நாம் வெளிக் கொணர வேண்டும். மகிழ்ச்சியாய் இருக்க பழகிக் கொண்டு விட்டால் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சாதாரணமாகி விடுகின்றன.

"முட்டாள் மகிழ்ச்சி தூரத்திலிருப்பதாக எண்ணி அதைத் தேடுகிறான். ஞானம் பெற்றவன் அதைத் தனது காலுக்கு அடியிலேயே வளர்த்துக் கொள்கிறான்" என்கிறார் ஜேம்ஸ் ஒப்பன்ஹிம் என்பவர். சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் ஒருவனே. மிருகங்கள் சிரிப்பதைக் காண முடிவதில்லை.

மகிழ்ச்சியாக இருப்பவர்கள் முகதத்தில் ஒரு கவர்ச்சி இருக்கும். மகிழ்ச்சியாக இருப்பவர்களை எல்லோரும் விரும்புவார்கள். உதவி செய்யவும் முன்வருவார்கள். மகிழ்ச்சியாக இருப்பவர்களைக் காணும்போது மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியாய் இருக்க ஓர் உந்துதல் ஏற்படும். உறவை ஏற்படுத்த விருப்பம் வரும். முகத்தில் சோகமாக வெறுப்போடு இருப்பவர்களை யாரும் விரும்புவது குறைவு. உதவுவதற்கு முன்வர மாட்டார்கள். மகிழ்ச்சியாக இருக்கப் பழகினால் மற்றவர்களோடு நல்ல உறவை ஏற்படுத்த முடியும். உற்சாகத்தோடு வரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கச் சக்தி பிறக்கும்.

**சிந்தனை..................**

- மற்றவர்களின் உணர்ச்சிகளை மதித்து நட.
  உணர்ச்சி........ உலகில் நடமாடும் பலரை நீ அறிவு உலகிற்குக் கொண்டு வந்து விடலாம்.
- கவலைகள் உன்னில் வாழலாம் ஆனால் நீ கவலைக்குள் வாழாதே
- கடவுளைப் பார்த்துத் தலையசைத்தால் மட்டும் போதாது. அவர் காட்டுகின்ற வழியில் நடக்க வேண்டும்.
- துன்பமில்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவன் அடைந்த இன்பமே ஒரு நாள் அவனுக்குத் துன்பமாக மாறும்.

**நன்றி : எஸ். ஜே. யோகராசா**

**தொடரும்.........**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கன்னி மரியாவின் கணவர் புனித யோசேப்பு

இறையனுபவம் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டால் புனித சூசையப்பரைப் போல் இருக்க வேண்டும். எவ்வாறெனில் ஆண்டவரையும், நம் அன்னையையும் அருகே காண வேண்டும், அவர்களோடு இருக்க வேண்டும். அவர்களுக்காக உழைக்க வேண்டும். அவர்களது மகிழ்ச்சியை தேட வேண்டும். கேள்விகள் இன்றி ஆண்டவரையும், அன்னையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக விவிலியத்தில் சூசை கூறினார் என்று ஒரு வார்த்தை கூட இருக்காது. இறையனுபவம் அப்படித்தான் இருக்க வேண்டும். ஒரு வார்த்தை கூட பேசாதவராய் அவர் இறையனுபவத்தில் நிறைந்திருந்தார்.

கன்னி மரியாவின் கணவரும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையுமான புனித யோசேப்பு பற்றி விவிலியம் மிகச் சுருக்கமாகவே சொல்கிறது. ?நீதிமான்? அவர் கடவுளுக்கு மிகவும் பணிந்து நடப்பவர் எனக் காட்டுகிறது. தச்சுத்தொழில் செய்து தந்தைக்குரிய பொறுப்பேற்று, கணவருக்குரிய கடமைகளை நிறைவேற்றி குடும்பத்தை நல்ல முறையில் நடாத்தினார். கன்னி மரியின் பேறுகாலத்துக்கு சத்திரம் தேடி அலைந்த போதும் குழந்தையைக் கொடுங்கோலன் ஏரோதுவின் பிடியிலிருந்து விடுவிக்க எகிப்துக்கு ஓடிச் சென்ற போதும் பல இன்னல்களையும் தாங்கிக் கொண்டார். இதன் வழியாகவே இயேசுவின் மீட்புப் பணியில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

புனித யோசேப்பு பழைய ஏற்பாட்டில் காணப்படும் சூசையோடு ஒப்பிடுவதைக் காணலாம். உழைப்பின் மேன்மையைப் பறைசாற்றும் திருக்குடும்பத்தின் தலைவர். "வளம் தரும் வளன்" சூசையின் வழியில் நம் பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி இறைவனின் மகிமையில் மன நிறைவடைவோம்.

கத்தோலிக்க புனிதர்களில் புனித கன்னிமரியாவுக்கு அடுத்ததாக புனித யோசேப்பு வணங்கப்படுகிறார். கிறிஸ்தவ வரலாற்றில் தொடக்க காலம் முதல் இவர் புனிதராக போற்றப்படுகிறார். இவர் கத்தோலிக்கர்கள் மற்றும் கிழக்கு மரபு வழித் திருச்சபையினரால் மிகவும் மதிக்கப்படுகிறார். புனித யோசேப்பு அகில உலகத் திருச்சபை, கற்பு, கல்வி, திருமணம், குடும்பங்கள், நல்ல மரணம் ஆகியவற்றுக்கு பாதுகாவலராகத் திகழ்கின்றார்.

நன்றி - இணையம்

# ஞாயிறு மறைப் பாடசாலை உப அதிபர்களுக்கான கூட்டம்

திருகோணமலை மறைமாவட்ட ஞாயிறு மறைப் பாடசாலை உப அதிபர்களுக்கான கூட்டம் கடந்த 09.02.2019 அன்று காலை 10.30 மணியளவில் மறைக்கல்வி ஆணையர் அருட்பணியாளர் T. கிங்ஸ்லி றொபட் அவர்களால் நடாத்தப்பட்டது கூட்டத்தின் விடயங்களாக,

❖ஞாயிறு பாடசாலையின் அவசியம் பற்றியும்

❖பங்குத்தரிசிப்பு அதனை எவ்விதம் ஒழுங்கமைத்து வழிநடாத்துவது பற்றியும்

❖ஆயர் அவர்களின் கருத்தின்படி மறைக்கல்வி மாணவர்களும் பாலர் சபையினரும் மாதத்தின் 03ம் வாரத்தில் இணைந்து செயல்படுவது பற்றியும் ஞாயிறு பாடசாலையில் பாடத்திட்டத்துடன் கிறிஸ்தவ விழுமியங்கள் கற்பிக்கப்படுவதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அன்றைய நாளில் ஞாயிறு பாடசாலை அசிரியர்களுக்கான ஒன்றியம் அமைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பின்வருமாறு:

தலைவர் : திருமதி. மேரி தயாளினி உதயராஜ் - செல்வநாயகபுரம்
செயலாளர் : திருமதி M. சந்திரகாந்தன் - உவர்மலை
உப செலாளர் : செல்வி. K. S. ஆஞ்சலா றுவணி - சீனன்குடா
பொருளாளர் : திரு. அ. நரேஸ் - மூதூர்

நிர்வாக உறுப்பினர்கள்
திருமதி P. ஜக்குலின் மரியாள் - கன்னியா
செல்வி A. ஆன் றொஸ்ரினா - பேராலயம்
திருமதி C. பிறிஜட் மேரி - உவர்மலை
திருமதி G. G. சியாமா டில்கானி - ஆண்டாங்குளம்
செல்வி. A. L. D. துஷானி மித்யா - பேராலயம்

புகைப்படம் 12ம் பக்கத்தில்........

மறைக்கல்வி நிலையம்

# மறையாசிரியர்களின் கவனத்திற்கு,

## ஆய்வுக் கட்டுரை 2019 (2018)


தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் மறையாசிரியர் தேர்வுகளில்,

2018ம் ஆண்டு மறையாசிரியர் இறுதித் தேர்வில் தோற்றி சித்தி பெற்றுள்ள பரீட்சார்த்திகள், அதன் அடுத்த கட்ட தேர்வான ஆய்வு கட்டுரையை எழுதி ஆனி மாதத்திற்குள் தத்தம் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். அவை எமக்கு அனுப்பிவைக்கப்படும்.

ஆய்வு கட்டுரை எழுதுவதற்கான தலைப்புகளும் விபரங்களும் ஏற்கனவே (சென்ற மாதம்) உங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அனுப்பியுள்ளோம். இதுவரை அதனைப் பெற்றிராவிடின் தயது செய்து எம்மோடு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி எண் 0112685459

அருட்சகோ. ரஞ்சி போல்துரை
பொறுப்பாளர் - தமிழ்ப்பிரிவு
தேசிய மறைக்கல்வி நடுநிலையம்

# பாடுபட்ட சிலுவை




இந்த பாடுபட்ட சிலுவை ஊர்தி சிலுவை என அழைக்கப்படுகின்றது. (யுத்த மொழியில் ஊர்தி என்பது ஒரு பொருளின் கூர்மையான விம்பமாகும்.) இக் கூர்மையான சிலுவையானது சிலுவையில் அறையுண்ட சிலுவையின் பாடுகளையும், மனித விடுதலைக்காக, அவருக்கு கிடைத்த அவமானத்தின் சின்னமாகவும் கருதப்படுகின்றது. இந்த இரண்டு சிலுவைகளும் இரண்டு வகையான அமைப்பைக் கொண்டது.ஒரு தலைப் பகுதி ஆணியால் அறையப்பட்ட அமைப்பு சிலுவையானது முடி அணிந்ததாகவும் ஏனையவை நான்கு திசைகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் உள்ளது. மேலிருந்து கீழ் வரும் நீண்ட பகுதியானது இயேசுவை சிலுவையின் பக்கமாக குத்துவதற்காக ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் இச் சிலுவையானது ஜெஸ்தமனி தோட்டத்தில் இயேசுவின் துன்பக்கிண்ணமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இரத்தம் கிண்ணத்திலிருந்து வெளியே வருவதைப் போன்று வடிவமைக்கப்படுகின்றது. அது இயேசுவின் துன்பங்களை நினைவுபடுத்துகின்றது. இந்தச் சிலுவை பெரிய வியாழன், பெரிய வெள்ளியின் அடையாளமாக பயன்படுத்தப்படுகின்றது.

நன்றி - சிலுவைகளின் சரித்திரம்

# சாதாரண சிலுவை



குறுக்ஸ் சிம்பிலெக்ஸ் அல்லது நிலைக்குத்தான சிலுவை என இது அழைக்கப்பட்டது. (மரக்கம்பம், மரத்தூண் எனவும் கூறலாம்.) ஆரம்பத்தில் உரோமை இராட்சியத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் இது போன்ற கம்பத்திலேயே அறையப்பட்டார்கள் என்பது பலரின் நம்பிக்கையாக உள்ளது. அவர்களின் கரங்கள் இயேசுவைப் போல ஆணியால் அறையப்படவில்லை. கைகள் கயிற்றால் தலைக்கு மேலாக வைத்து கட்டப்பட்டன. கால்களில் ஆணி அறைவதன் மூலம் இரத்தப்பெருக்கினாலோ, களைப்பினாலோ அல்லது மாமிசம் உண்ணும் விலங்கு மற்றும் பறவைகளினால் இறப்பு நிச்சயிக்கப்பட்டது. இந்த சிலுவைக் கம்பத்தை பினீசியர்களே அறிமுகம் செய்ததாக நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (பே)ஆசையால் ஒரு அவலம்

கடவுள் கோவேறு கழுதையைப் படைத்துவிட்டு "நீ கோவேறு கழுதை எனப்படுவாய். நீ விடியல் தொடக்கம் இரவு வரை உன் முதுகில் பாரமான சுமையைச் சுமந்து தொடர்ச்சியாக வேலை செய்வாய். நீ புல்லைச் சாப்பிடுவாய். உனக்குப் புத்தி மந்தமாய் இருக்கும். நீ ஐம்பது வருடங்கள் உயிர் வாழ்வாய்." என்று கூறினார். அதற்குக் கோவேறு கழுதையோ இப்படியான ஒரு வாழ்க்கையை ஐம்பது வருடத்திற்கும் தன்னால் வாழ முடியாது என்றும் ஆதலால் இருபது வருடத்திற்கும் குறைவான ஆயுட்காலத்தை தனக்குத் தரும்படியும் கடவுளிடம் கேட்டது. கடவுளும் அதன் விருப்பப்படியே ஆகட்டும் என்றார்.

பின்னர் கடவுள் நாயைப் படைத்துவிட்டு "நீ மனிதனுக்கு நெருக்கமான உறவினனாக இருந்து அவர்களது வசிப்பிடங்களை கண் விழித்துப் பாதுகாப்பாய். மனிதர் சாப்பிட்டு மிஞ்சிய துண்டுகளை உண்டு இருபத்து ஐந்து வருடம் உயிர்வாழ்வாய்." என்று நாயிடம் கூறினார். ஆனால் நாயோ இப்படியான நாய் வாழ்க்கை வாழ தனக்கு இருபத்து ஐந்து வருடம் மிகவும் அதிகம் என்றும் அதை பத்து வருடத்திற்கும் குறைவான ஆயளாக மாற்றித் தரும்படியும் கேட்டது. நாய் கேட்டது போலவே கடவுளும் பத்து வருடத்திலும் மேற்படாத ஆயுளைக் கொடுத்தார்.

பின்னர் கடவுள் குரங்கைப் படைத்துவிட்டு அதனிடம் "நீ எந்நாளும் மரத்திற்கு மரம் தாவுவாய். ஒரு முட்டாளைப் போல நடந்து கொள்வாய். கேளிக்கைக்குரியவனாய் இருப்பாய். நீ இருபது வருடம் உயிர் வாழ்வாய்." என்றார். குரங்கோ இப்படி கோமாளியாக உயிர்வாழ இருபது வருடம் மிகையானது. அதை பத்து வருடத்திற்கும் மேற்படாதவாறு தருமாறு கடவுளிடம் கேட்க கடவுளும் அப்படியே சம்மதித்தார்.

பின்னர் கடவுள் மனிதனைப் படைத்துவிட்டு "நீ மனிதன் எனப்படுவாய். பூமியில் வாழ்கிற உயிரினங்களுள் நீ மட்டுமே பகுத்தறிவுள்ளவன். உலகத்திலுள்ள படைப்புக்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தி அதற்குத் தலைவனாயிருக்க உன் அறிவுத்திறனைப் பயன்படுத்துவாய். நீ உலகத்தில் ஆதிக்கம் செலுத்தி இருபது வருடம் உயிர்வாழ்வாய்" என்றார். மனிதனோ உலகத்தில் மனிதனாக வாழ வெறும் இருபது வருடங்கள் மிகவும் குறைவான ஆயுட்காலமாகும். ஆகவே இவ்விருபது வருடங்களுடன் சேர்த்து கோவேறு கழுதை நிராகரித்த முப்பது வருடங்களையும், நாய் நிராகரித்த பதினைந்து வருடங்களையும் மற்றும் குரங்கு நிராகரித்த பத்து வருடங்களையும் சேர்த்து தனக்கே தரும்படிக் கேட்டான்.

கடவுளும் அவன் ஆசைப்படியே இருபது வருடங்களை அவன் மனிதனாக வாழவும், பின்னர் திருமணம் செய்தபின் முப்பது வருடங்களை கழுதைபோல் முதுகில் பாரம் சுமந்து இரவு பகலாக உழைத்து வாழவும், பின்னர் பிள்ளைகளைப் பெற்று பதினைந்து வருடங்கள் நாயாக வீட்டையும் உறவுகளையும் பாதுகாத்து அவர்களுக்கு மிஞ்சியதை உண்டு உயிர் வாழவும், பின்னர் அவனது முதுமைக்காலத்தில் பேரப்பிள்ளைகளுக்கு கோமாளியாய் வேடிக்கைகாட்டி பத்து வருடங்கள் குரங்கைப்போல் உயிர்வாழவும் பணித்தார்.

இது ஓர் கற்பனைக் கதையாக இருக்கலாம். ஆனால் இதில் நிறைய உண்மைகள் உள்ளன. மனிதனுக்கு ஆசைதான் ஆபத்தைக் கொடுக்கிறது. ஆசையால்தான் மனிதன் ஆபத்தைத் தேடிக்கொள்கிறான். வேதாகமம் தொடக்க நூலிலே நாம் பார்க்கின்றோம். கடவுள் ஆதாமையும் ஏவாளையும் படைத்த பின் தான் படைத்த அனைத்து படைப்புக்களையும் ஆதாமிடம் காட்டி அவைகளுக்கு ஆதாமையே பெயரிடச் சொன்னார். ஆதாம் அவைகளுக்கு இட்ட பெயராலேயே நாம் இன்றும் அவைகளை அழைக்கின்றோம். உலகத்திலுள்ள அனைத்தின் மீதும் ஆதாம் ஏவாளுக்கு அனைத்து அதிகாரங்களையும் கொடுத்தார். ஆனால் சிங்கார வனத்திலுள்ள ஒரேயொரு கனியை மட்டும் உண்ண வேண்டாமென கட்டளையிட்டார்.

ஆசை யாரைத்தான் விட்டது. பாம்பின் ஏவதலால் ஏவாள் கனியை உண்டு ஆதாமிற்கும் கொடுத்தாள். அக்கணமே உலகில் பாவம் நுழைந்தது. அவர்கள் நிர்வாணமாய் நிற்பதை உணர்ந்து இடுப்பில் அரைக் கட்சையை அணிந்து இறைவனுக்குப் பயந்து ஒளிந்து கொண்டார்கள். ஆம் ஆசைதான் உலகத்திற்கு முதல் பாவத்தை அறிமுகப்படுத்தியது. உலகிற்கு பாவம், தண்டனை, வலி மற்றும் மரணம் அனைத்தையும் உற்பத்தியாக்கியது ஆசைதான். ஆசை வெட்கமறியாது என்பார்கள். ஆம் ஆசை உள்ளத்தில் உருவெடுக்கும்போது நமக்கு வெட்கம் தலைமறைவாகிவிடுகிறது.

"அனைவரும் ஆசையைத்துறக்க வேண்டுமென புத்தர் ஆசைப்பட்டார்." என்று ஒரு புதுமைமொழி உண்டு. உண்மைதான். ஆசையென்பது மனிதரிடமிருந்து பிரித்தெடுக்க முடியாத ஒரு விஷக்கிருமி. "Everybody wants to go to heaven but nobody wants to die." என்று அற்புதமான ஒரு ஆங்கிலப் பொன்மொழி உண்டு. அதாவது எல்லோருக்கும் சொர்க்கத்திற்குப் போக ஆசையுள்ளது. ஆனால் ஒருவருக்கும் சாக விருப்பமில்லை.

மனிதன் ஆசையுடன் ஒட்டிப் பிறந்தவன் என்பதை அழகாக இது விளக்குகின்றது. பலருக்கு சிறிய ஆசைகள், சிலருக்கு பெரிய ஆசைகள், சிலருக்கு பேராசைகள். பேராசை பெருநட்டம். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, புகழாசை என்று ஆசைகள் வகுக்கப்பட்டுள்ள போதிலும் இவற்றின் கூறுகள் நவீன யுகத்தில் அதிகரித்துள்ளன.

அலகை கூட இயேசுக்கிறிஸ்துவை சோதித்தபோது முதலில் அவர் பசியாய் இருப்பதை உணர்ந்து சாப்பாட்டு ஆசையைப் புகுத்துகிறது. ஏவாளுக்கு கனியைக்காட்டி பாவத்தை உலகினுள் நுழைத்த சாத்தான் பாவத்தை வெல்ல வந்த இயேசுக் கிறிஸ்துவிற்கும் அதேமாதிரியான ஒரு சோதனையைக் கொணர்ந்தது. ஆனால் இறுதியில் அதில் தோல்வி கண்டது. பின்னர் சாத்தான் உலக அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் இயேசுவிற்குக் காட்டி தன் காலில் விழுந்து வணங்கினால் இவையனைத்திற்கும் இயேசுவை அரசனாக்குவதாக புகழாசையைக் காட்டுகிறது. புகழுக்கு மயங்காத அரசர்களே இல்லை. ஒரு நாட்டில் புகழுக்கு மயங்காத அரசன் ஒருவன் இருந்தானாம். ஆனால் ஒரு புலவன் வந்து உலகிலேயே நீ மட்டும்தான் புகழுக்கு மயங்காத அரசன் என்றதும் உடனே அவ்வரசன் புகழில் மயங்கிவிட்டானாம். இங்கு இயேசுக் கிறிஸ்து அரசன் என்றறிந்த சாத்தான் மண்ணாசை மற்றும் புகழாசையால் இயேசுவை மடக்கப்பார்த்தது. ஆனால் இயேசுவோ அனைத்திலும் வெற்றி கொண்டார்.

சாத்தானுக்கு இயேசுவைச் சோதிக்க எத்தனையோ வழிகளிருந்தும் ஆசையைக்காட்டி அடிபணிய வைக்க முயற்சிக்கிறது. காரணம் ஆசைதான் அனைத்துப் பாவங்களுக்கும் மூல காரணம்.

"The greedy is a lasting slavery" அதாவது பேராசை என்பது அழியாத அடிமைத்தனம். புளுக்களுக்கு மீன்கள் ஆசைப்படாதிருந்தால் சில மீன்கள் கூட அடுப்படிக்கு வராது. ஒரு சினிமாப் பாடலில் ஆசையால் வரும் இழப்புக்களையும், விளைவுகளையும் கவிஞர் அழகாக இப்படிச் சொல்கிறார்.

தூக்கம் விற்றுத்தானே ஒரு கட்டில் வாங்க ஆசை
தூண்டில் விற்றுத்தானே அட மீன்கள் வாங்க ஆசை
நாக்கை விற்றுத் தேனை வாங்கி
நீரை விற்றுத் தாகம் வாங்கி
பூவை விற்று வாசம் வாங்கி
தாயை விற்றுப் பாசம் வாங்கி
பூட்டை விற்றுச் சாவி வாங்கும் பொல்லாத ஆசை ஆசை
அளவுக்கு மீறி ஆசைகள் வந்தால் நிம்மதி சென்றுவிடும்
வரவுக்கு மீறி செலவுகள் செய்தால் வழிகள் மாறிவிடும்.

ஆம் இப்பாடலில் ஒவ்வொரு வரியும் மனிதன் சிலவற்றிலுள்ள ஆசைக்காக எவ்வளவோ அவலங்களையும் இழப்புக்களையும் சந்திக்கிறான் என்பதை அழகாக விளக்குகின்றது.

நாம் ஆசைகளால் தேவைகளை விற்று வேதனைகளைக் கொள்வனவு செய்கிறோம் என்பதே இப்பாடலின் முழுமொத்தக் கருத்தாகும்.

ஆசையில்லையேல் இன்று மனிதன் உலகை இப்படியான ஒரு நவயுகமாக மாற்றியிருக்க முடியாது. ஒவ்வொன்றிலுமுள்ள ஆசையினால்தான் புதுக் கண்டுபிடிப்புக்கள், படைப்புக்கள், சிந்தனைப்புரட்சிகள், சமூகப்பொருளாதார மற்றும் விஞ்ஞான வளர்ச்சிகள் எல்லாம் உண்டாயின. ஆசைகளால்தான் அறிவுகள் வந்தது. ஆசையினால்தான் பிரமிக்கத்தக்க அதிசயங்களும் நிகழ்ந்தது. அதேபோல ஒவ்வொரு கண்டுபிடிப்புக்களாலும் பின் விளைவுகள் ஏற்பட்டு இன்று உலகம் அழியும் தருவாய் நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. மொத்தத்தில் ஆசையென்ற ஒன்று இல்லையேல் மனிதன் பாவமறியாத, வெட்கமறியாத, பயமறியாத பழைய ஆதாம் ஏவாளைப் போலவே அமைதியாக வாழ்ந்திருப்பான்.

ஆசையினால் ஒரு தேவை ? அது
அளவுக்கு மிஞ்சிய அமிர்தம் (நஞ்சு)
தேவையினால் ஒரு ஆசை ? அது
தேடுதலின் ஒரு சுகிர்தம்.

மூதூர் A. S. K. அற்புத அன்ரன் ராஜ்
திருமலையிலிருந்து

## மனங்கள் மகிழவே..........

அருட்பணி N. C. அருள்வரதன்

அமைதியை நிலைநிறுத்த
அனைவரும் உழைக்க வேண்டும்
பகைமைகள் பேதங்களை வாழ்வில்
விலக்கி ஒதுக்கி விட்டே
அன்போடு அனைவரையும் ஏற்று வாழும்
உயர்வான நிலைகளே வேண்டியதாகும்

கடின மனநிலைகளாலே
உறவகளை உடைக்காமல்
அன்பு பரிவு மன்னிக்கும் மன உணர்வுகள்
இவைகளே நமக்குள் உதயமாகி
பெருமைகள் சேர்க்கும்போது
மனித மாண்புகளே மேலோங்குமே

வறுமைகள் வேதனைகள் இன்னும்
துயர்நிறைந்த நிலைகளை இனங்கண்டு
துணைபுரிய முன்வரவேண்டும்
கண்டும் காணாது விலகிச் செல்லாமல்
முடிந்ததை முடியாதோர் பெறவே
நம்மால் முடிந்ததை நாம் செய்ய வேண்டுமே

மனித மாண்புகள் மேன்மை பெறவே
மனிதாபிமானங்களை மதித்தே
அனைவரையும் அன்புடனேற்றே
உறவுகளை மலரச் செய்யும்போது
இறைவனின் நிறைந்த ஆசிரை நாமே
குறைவின்றிப் பெறுவது உறுதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி கற்போம்

01. தூய லூக்கா நற்செய்தி ஏறக்குறைய எழுதப்பட்ட ஆண்டு?

கி.பி. 70க்குப் பின்

02. புனித லூக்கா நற்செய்தியின் முதன்மைக் கருத்தாக எதைக் குறிப்பிடுகின்றார்?

இழந்து போனதை மீட்கவே மானிட மகன் வந்தார்

03. புனித லூக்கா யார்?

அந்தியோக்கியாவைச் சேர்ந்தவர்
மருத்துவர்
பிற இனக்கிறிஸ்தவருள் ஒருவர்
புனித பவுலுடன் சேர்ந்து நற்செய்திப் பணியாற்றியவர்

04. ஒழுக்கத்தை உயிரை விட மேலாகப் போற்றுவது எப்படி?

கடவுள் நம்பிக்கையுடன் தன்னம்பிக்கையை
வளர்த்து உண்மைக்குச் சான்று கூறும் போது

05. எமது நேரத்தை வீணாக்குவது எவை?

அச்சம், பதற்றம், தேவையற்ற கவலை

06. பாதுகாக்கப்பட வேண்டியவன் மனிதன், புதுப்பிக்கப்பட வேண்டியது மானிட சமுதாயம். ஏனெனில் அனைத்திற்கும் மையம் மனிதன். இதனை இரண்டாம் வத்திக்கான் எவ்வாறு கூறுகின்றது?

"மனித மாண்பும் மக்கள் வாழ்வியலும்"

07. திருத்தூதரான புனித பேதுருவின் தலைமைப் பீட விழா எப்போது கொண்டாடப்படுகின்றது?

மாசி 22

08. திருகோணமலை மறைமாவட்டத்தின் இவ்வாண்டிற்கான கருப்பொருள்கள் எவை?

புனித லூக்கா
விவிலிய வாசிப்பு
சமூக விழிப்புணர்வு

09. 2019ம் ஆண்டு வழிபாட்டின் முறைப்படி எந்த நற்செய்தியாளரின் ஆண்டாக கருதப்படுகின்றது?

புனித லூக்கா

10. புனித லூக்காவின் சின்னம் எது?

எருது

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

## குருத்தோலை ஞாயிறு

- ❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- ❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- ❖ 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

**1ம் பரிசு - 500/=  2ம் பரிசு - 300/=  3ம் பரிசு - 200/=**



பெயர் ..................................................................

முகவரி ..................................................................

பங்கு ..................................................................

தரம் ..................................................................

**முடிவுத் திகதி 15.04.2019**

# மணித மாண்புகள் மலரவே........

அருட்பணி. N.C. அருள்வரதன்

**கவிதை வரிகளை**
**சரியாக வடிவமையுங்கள்**
**எல்லோரும் பங்குபெறலாம்**
**இதோ கவிதை வரிகள் ..........**

- ❖ பகைமைகளும் பேதங்களும்
- ❖ மறைந்தே வாழ்வோடு என்றும்
- ❖ உறவுகளே உதயமாக வேண்டும்
- ❖ உட்பகையும் குரோதங்கள்
- ❖ உறவுகளைக் கலைத்து விடும்
- ❖ அன்பும் அறநெறி வாழ்வுகளே நம்
- ❖ உறவுகள் வளரத் துணை புரியுமே
- ❖ என்னதான் வெறுப்புக்கள் வந்தாலுமதை
- ❖ மனித மாண்பின் மேன்மையாகுமே
- ❖ மன்னித்து ஏற்று வாழ்வதே

நன்றாக அவதானித்து
சரியாக வடிவமையுங்கள்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 15.04.2019


# "கிறிஸ்மஸ்" சிறப்புப்போட்டி

Fr. NC

## இயேசுவின் பிறப்பு - போட்டி முடிவுகள்

**இதோ சரியான வரிகள்**

வானவரின் கீதங்களும்
வாழ்த்தொலியின் கீதங்களும்
வானுயர்ந்து நிற்கவே
மாட்டையும் குடிசையிலே
மாபரனார் பிறக்கின்றாரே
காலத்தை வெளிக்காட்ட
ஞானிகளும் வந்துபோக
மாமரியாள் தன் மகனை
மண்ணிலே தருகின்றார் மகிழ்வுடனே



பங்கு கொண்டவர்கள் : 17 பேர்
சரியாக வடிவமைத்தவர்கள் : 4 பேர்
பரிசுத் தொகை சமமாகப் பிரித்து வழங்கப்படுகின்றது

தே. சமிஸ்டன் - 250/-
3ம் வட்டாரம்,
நிலாவெளி

N. ஜொலஸ்டின் - 250/-
மின்சார நிலையவீதி
மூதூர் -07

R. டியோன் ஜீலியஸ் - 250/-
மின்சார நிலைய வீதி
மூதூர்

மேரி கிறிஸ்ரினா எஸ்டன் - 250/-
இல - 12, முதல் தெரு,
பாரதிபுரம்
அன்புவழிபுரம்

# குட்டிக்கதை ஒன்று

## உருவாக்கம்

Fr. NC

ஒரு குடும்பம், தாய் தந்தை ஒரே ஒரு மகன். மகனுக்கு எட்டு வயதிருக்கும். சிறப்பான முறையிலே அந்த மகன் வளர்க்கப்படுகின்றான். அவனுக்குரிய வழிகாட்டல், வழிநடத்தல் எல்லாமே மிகவும் சிறப்பாக இருந்தது.

அவன் சிறுவனாக இருந்தாலும் தாய்மீது அவனுக்கு நிறைந்த அன்பு. தந்தைமீதும் நிறைந்த அன்பு. தந்தை என்ன சொன்னாலும் அதைச் செய்வான். உண்மையில் அந்தப் பெற்றோருக்கு ஒரே மகன் என்றாலும் அவனது உருவாக்கத்தில் அவர்களுக்குப் பெருமகிழ்வே.

அந்தச் சிறுவனும் அவனது பெற்றோரை பெரிதாகவே நிலைத்து வாழ்கிறான்.

அவனது உருவாக்கத்தைப் பொறுத்தவரை அவனுக்கு "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பது உண்மையாக வெளிப்படுவது போன்றுள்ளதல்லவா....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 | | 03 |
| 11 | | 03 |
| 1937 | | 2017 |



**அமரர் வீரப்பன் செல்லத்துரை ஜோசேப்**

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது
பார்வையில் மிக மதிப்புக்குரியது"
(தி.பா: 116:15)

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
நாம் கொண்ட பாசம் இன்னும்
நலியவில்லையே தந்தையே
நாளாந்தம் செபிக்கின்றோம்
நல்லடியார் உங்களுக்காய்
நாதன் இயேசுவின் பாதத்தில் வீற்றிருக்க!

பிரிவால் நினைந்துருகும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள் கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்

**பங்கு பற்றியவர்கள் ~ 15 சிறுவர்கள்**

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/- ரூபா
பி. டில்ஷான்
இல: 320/1,
அன்புவழிபுரம்
திருகோணமலை

2ம் பரிசு 300/- ரூபா
கிறிஸ்ரி தேஹாரிக்கா
இல: 62, இலிங்கநகர்,
திருகோணமலை


3ம் பரிசு 200/- ரூபா
ஜெ. ஷெனுவ்
மின்சார நிலையவீதி,
மூதூர் - 07

## புனித மாற்கு நற்செய்தி சிறப்புப் போட்டி ~ 2 முடிவுகள்

பங்குபற்றியவர்கள் : 34 பேர்
மிகச் சரியாக விடையளித்தோர் :- 22 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/- ரூபா
அ. சாருணியா
10ம் வட்டாரம்,
நெடுந்தீவு



2ம் பரிசு 300/- ரூபா
எஸ். ஆரோன்
இல 48/204,
விநாயகபுரம்
மட்டிக்களி

3ம் பரிசு 200/- ரூபா
செல்வி ஜே. ரம்யா
6ம் வட்டாரம்,
சாம்பல்தீவு

**பாராட்டுக்குரியவர்கள்**

01. செ. டில்றுக்ஷன் - மூதூர்
02. ஜே. சி. டானியலா றியோனா - குவாடலூப்பே
03. றொ. கெ. யூட்லின் - பேராலயம்
04. பீ. ஆன் பிறசில்டா - இலிங்கநகர்
05. கவின் கிறிஸ் யஸ்வின் - செல்வநாயகபுரம்
06. குணசேகரன் தர்ஷினி - பாலையூற்று
07. எஸ். கயானி - அன்புவழிபுரம்
08. ஐ. மார்ஷல் - பேராலயம்
09. அ. கரோலினி கிறீப்திக்கா - பேராலயம்
10. பி. கொன்சலா - உவர்மலை
11. திருமதி. ஸ்ரெலா ஜெரோம் - சாம்பல்தீவு
12. டெ. கீதாஞ்சலி - அன்புவழிபுரம்
13. ஆர். எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
14. தே. சமில்டன் - நிலாவெளி
15. ம. க.:பினா - பேராலயம்
16. திருமதி.ஜோ. அ.அமலராணி - அன்புவழிபுரம்
17. வெ. ஆன்டிலக்ஷிக்கா - கும்புறுப்பிட்டி
18. நெ. டெலிஷா - குவாடலூப்பே
19. [illegible] - பாலையூற்று

## விசேட போட்டி ~ 2019 புனித லூக்கா நற்செய்தி அதி 04 ~ 06 வரை வினாக்களுக்கு விடை அளியுங்கள்

01. "ஐயா! இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை, ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகின்றேன்" என யார் யாரிடம் கூறியது?
...........................................................................................................

02. இயேசு நாசரேத்துக்குச் சென்று தொழுகைக் கூடத்தில் யாருடைய ஏட்டுச் சுருளை வாசித்தார்?
...........................................................................................................

03. இயேசுவின் "சமவெளிப் பொழிவு" எத்தனையாம் அதிகாரம், வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது?
...........................................................................................................
...........................................................................................................

04. என் வார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படும் எவரும் யாருக்கு ஒப்பாவார் என இயேசு கூறினார்?
...........................................................................................................
...........................................................................................................

05. இயேசு தம் சீடருடன் வயல்வெளியால் வந்தபோது அவர்கள் என்ன செய்தார்கள்?
...........................................................................................................
...........................................................................................................

06. "ஆண்டவரே, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என இயேசுவிடம் கேட்டவர் யார்?
...........................................................................................................

07. இயேசு தெரிந்தெடுத்த திருத்தூதர்கள் நால்வரின் பெயரைக் குறிப்பிடுக?
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

08. "வாயை மூடு இவரை விட்டு வெளியே போ" என்று இயேசு யாரைப் பார்த்துக் கூறினார்?
...........................................................................................................
...........................................................................................................

09. எலியாவின் காலத்தில் எத்தனை ஆண்டுகள் வானம் பொய்த்ததாக இயேசு தொழுகைக் கூடத்தில் இருந்தவர்களைப் பார்த்துக் கூறினார்?
...........................................................................................................

10. இயேசு முடக்குவாதமுற்றவரைப் பார்த்துக் கூறியது என்ன?
...........................................................................................................
...........................................................................................................

11. "என்னைப் பின்பற்றி வா" என இயேசு யாரிடம் கூறினார்?
...........................................................................................................

12. சீமோனின் வீட்டிற்கு இயேசு சென்றபோது எந்நோயால் அவரது மாமியார் துன்புற்றிருந்தார்?
...........................................................................................................


13. தாமும், தம்முடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்ததாகப் பரிசேயரிடம் இயேசு கூறினார்?
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

14. அலகை இயேசுவுக்கு கொடுத்த மூன்று சோதனைகளுள்ஒன்றை எழுதுக?
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

15. இயேசுவின் அருள்மொழிகளைக் கேட்ட தொழுகைக் கூடத்தில் இருந்தவர்கள்அவரைப் பார்த்துக் கூறியது என்ன?
...........................................................................................................
...........................................................................................................

பெயர் :...........................................
முகவரி:...........................................
பங்கு:...........................................

**முடிவுத்திகதி : 15. 04. 2019**



**கவலைகள் என்பது உதிரும் இலைகள்,
சந்தோசம் என்பது துளிர்க்கும் இலைகள்.......
உதிரும் இலைகளை துளிர்க்கும்
இலைகளுக்கு உரமாக்கிடுங்கள்....
வெற்றி எனும் மரம் அற்புதமாக
வளரும்....!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

மலர்வு 1957 ✝ 09 ✝ 15




உதிர்வு 2019 ✝ 02 ✝ 15

## அ. மரிய கிறிஷாந்துஸ் கொறேயிரா
### (குமார் / கொட்டியாரத்தான்)

பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள், உறவினர், அன்பர், நண்பர்கள்
இல 191, டொக்கியாட் வீதி,
திருகோணமலை

# பன்குளம் புனித அந்தோனியார் ஆலய ஆன்மீகப் பணிகளும் சிரமதானப் பணியும்





கடந்த 19.02.2019 செவ்வாய்க்கிழமை கன்னியா கிறிஸ்து அரசர் பங்கு மக்களும் பன்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இறைமக்களும் ஆலய சிரமதானப் பணிகளில் தங்களின் முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். இந்த சிரமதானமானது காலை 8.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை நடைபெற்றது. இப்பணியின் போது ஆலயத்திற்கு செல்லும் பிரதான பாதை ஆலயத்தின் முன்தோற்றத்தை மறைக்கும் காட்டுப்பகுதி ஆலயத்தின் சுற்றுப்புறம் ஆலயத்தின் உட்புறம் திருப்பண்ட அறை என்பன சுத்தம் செய்யப்பட்டன. அன்று கன்னியா பங்குத்தந்தையினால் 4.00 மணிக்கு அவ்வாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியின் பின்பு பங்குத்தந்தையும் இறை மக்களும் கலந்துரையாடி பின்வரும் தீர்மானங்களை நடைமுறைபடுத்தலாம் என முடிவு செய்தார்கள்.

1. ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு திருச்செபமாலையும் பி.ப 4.00 மணிக்கு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்
2. மாதம் ஒரு முறை சிரமதானத்தினை ஏற்பாடு செய்தல்.

பன்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் ஆன்மீக பணிக்காகவும் ஆலயத்தின் சீர்திருத்த பணிகளுக்காகவும் உங்களின் செபங்களையும் ஒத்துழைப்புகளையும் எதிர்பார்கின்றோம்.


தொடர்புகளுக்கு: **அருட்பணி. யேசுதாஸ் சுதர்சன்,**
கன்னியா பங்குத்தந்தை.

# ஞாயிறு மறைப் பாடசாலை உப அதிபர்களுக்கான கூட்டம்






# "நானும் தீர்ப்பு அளிக்கவில்லை" மேய்ப்புப்பணி கையேடு



" ஆண்டவரோடு 24 மணி நேரங்கள்" என்ற இவ்வாண்டின் செபமுயற்சியின் மையப்பொருள் மன்னிப்பு. இந்த செப முயற்சிக்கு உதவியாக, மார்ச் 29ம் திகதி மாலை முதல், மார்ச் 30ம் திகதி முழுவதும், அனைத்து ஆலயங்களும் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

அனைத்து பங்குத்தளங்களும், திருஅவை குழுமங்களும், துறவற சபைகளும், இந்த செபமுயற்சியை சிறப்பாக நடத்துவதற்கு உதவியாக, இந்த மேய்ப்புப்பணிக் கையேடு வெளியிடப்பட்டுள்ளது என, புதிய வழியில் நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை கூறியுள்ளது.

மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு இந்தப் பக்தி முயற்சியை, மார்ச் 29, வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு, வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் தலைமையேற்று நிறைவேற்றுவார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org